
www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

3171

விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகம்




# வெளிச்சம்

பங்குனி
சித்திரை
(1992)

www.tamilarangam.net

R172




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த ஆண்டும் முத்தமிழ் விழாவைச் சிறப்பாக நடத்த
ஏற்பாடுகள்நடைபெறுகின்றன.

ஒரு இன மக்களை ஒன்று சேர்க்கும் பலமாக மொழியும்,
பண்பாடும் இருக்கின்றன.

மொழியும், பண்பாடும் தேசிய உணர்வை வளர்ப்பதிலும்,
தேசிய ஒற்றுமையைப் பேணுவதிலும்
பெரிய பங்கை வகிக்கின்றன.

இவற்றின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஏற்படுத்தப்படும்
விழாவானது தேசத்தின் போராட்டத்திற்கு
உந்து சக்தியாக அமையும்.
மக்களைத் தேசத்தின் பின்னால் அணிதிரளச் செய்யும்.

எம்நாடு, எம்மொழி, எம்பண்பாடு ஆகியவற்றின் சிறப்பை அறிவதன்
மூலம் எம்மில் காலம் காலமாகப் படிந்திருக்கும் அறியாமை
இருள் நீங்குகின்றது.

புதிய விழிப்புணர்வு தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் நீண்ட தெரிந்த வரலாற்றில்
அவர்கள் சிறப்பாக நினைவு கூரத்தக்க
காலங்களில சங்ககாலம், சோழர்காலம்
தமிழீழ விடுதலைப் புலிகள் காலம்
மூன்றும் முக்கிய காலங்களாகக் கணிக்கப்படும்.

சங்ககாலமும், சோழர் காலமும்
தமிழ் மொழியின் வளர்ச்சியை, பண்பாட்டின் வளர்ச்சியை,
போரியலின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.

மிகப் பெரிய அளவில் அறிவியலில்
வளர்ச்சி இன்றி இவை நடந்திருக்க முடியாது.

அன்றைய அறிவியலோடு சம்பந்தப்பட்ட நூல்கள்
எமக்குக் கிடைக்கவில்லை, என்பதே சரியான முடிவாகும்.

சங்கத்தமிழர்கள் காலத்திலும், சோழர்
கம்போடியா வரை சென்று
வெற்றிக்கொடி நாட்டிய காலத்திலும் அவர்களிடம் நாடு இருந்தது.
அரசு இருந்தது.

இனி எங்கள் காலம் தமிழீழ விடுதலைப் புலிகள்
காலத்தைப் பார்ப்போம்.

எம்மிடம் எம் நாட்டின் ஆட்சி இப்போது இல்லை.
சோழப் பேரரசைப் போல் பன்மடங்கு பெரிய அரசான
பாரதத்தின் வன்கவர்வுப் படை எம்மிடம் தோற்றுப்போனது.
எமது மொழி, பண்பாடு, அறிவியல், போரியல்
வளர்ச்சிக்கான அடித்தளங்கள் இடப்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெளிச்சம்

பங்குனி – சித்திரை 1992
இதழ் 4

தமிழர்கள் என்பதில் நாம் பெருமை கொள்கிறோம்.
உலகமும் எமக்கு மரியாதை தருகின்றது.

எமது வளர்ச்சிக்கான அடித்தளங்களைப் பலப்படுத்தி வளர்க்கும்
விழா தான் முத்தமிழ் விழா.

முத்தமிழ் விழா எங்கள் பெருமைகளை
தொன்மையை, பண்பாட்டை சிறப்பாக நினைவு கூரும் விழாவாகும்.

இன்றைய எம் மேன்மையை, வளர்ச்சியை இன்னும் உணராதவர்களுக்கு
உணரவைக்கும் விழாவாகும்.

எவ்வளவோ அழிவுகள், அடக்குமுறைகள்ளும்
இங்கு வாழும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் நம்நாட்டின்
விடுதலைக்காக ஒன்று சேர்ந்து நிற்பதைக்
காட்டும் விழாவாகும்

தேசிய உணர்வை வளர்த்தெடுக்கும் விழாவாகும்.

தமிழ் நாட்டிலோ அல்லது வேறு எங்கோ
தமிழும், தமிழர்களும் எழுச்சி பெற
வேண்டுமானால் தமிழீழம் தான்
அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

எப்படி யூதர்கள் இஸ்ரேலை தம் புனிதநாடாக எண்ணுகிறார்களோ
அதே போல்தான் தமிழீழம் உலகத்தமிழர்களின்
புனித நாடாகும்.

ஹிப்றூ மொழி சிறப்பொழிந்ததும், யூதர்கள் நாடோடிகளாக
அலைந்ததும், அழிந்ததும் நாமறிந்த வரலாறு.

இன்று ஹிப்றூ சிறப்புற்று விளங்குகின்றது. யூதஇனம்
சிறப்போடு இஸ்ரேலில் ஆட்சி செய்கின்றது.

2000 ஆண்டுகள் அவர்கள் போராடினார்கள் வெற்றி பெற்றார்கள்.

எம்மொழியும், பண்பாடும் மேலும் சிறப்புறவும்,
தமிழீழம் எழுச்சி பெறவும்,
உலகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய உணர்வுடன் ஒன்றுபட்டு
நிற்கவும், எம் போராட்டத்திற்கு உந்து சக்தியாக
அமையவும், முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள்
சிறப்பாக அமையும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

கடந்த ஆண்டிலும் பார்க்கச் சிறப்பாக
இவ்வாண்டு முத்தமிழ் விழா நடைபெற
எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போம். □□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இந்த இதழில்.......

**சிறுகதை**

இலட்சியங்கள் வாழ்கின்றன — ரமணன் 09
வீரவன்னிச்சி — எஸ். நவநீதன் 22
தேடல் — மைக்கல் 45

**கவிதை**

ஆறுகவிதைகள் — ஆன்றணசிங்ஹ 13
விழுதுவிடும்வரை — கல்வயல் வே. குமாரசாமி 30
தாய் நிலம் — 'கருணாகரன் 42
காவலன் — சகுந்தலா அருணகிரிநாதன் 55

**கட்டுரை**

பண்டைத் தமிழரின் வீரவாழ்க்கை — பெருங்கடுங்கோ 05
இது இன்னொருபக்கம் — மாலன் 19
ஓவியம் என்றால் என்ன? — கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன் 33
காலமும் கோலமும் பற்றி — சதா 39
தொடர்பியலும் ஒலி ஒளிப்பதிவு நாடாவும் — சபா ஜெயராசா 53
தென் தமிழீழத்தில் பரவும்சிங்களம் — 57

**நேர்முகம்**

தேடல் இருப்பதால் எழுதுகின்றேன் — ராஜம் கிருஷ்ணன் 26

வெளிச்சம்
கலை, இலக்கிய சமூக இதழ்

இதழ் அமைப்பு:-
திணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

உருவாக்கம்:-
"ஆசிரியர் குழு"

வெளியீடு:-
விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்

ஓவியம்:-
"தயா"

அச்சு:-
ம. மரியதாஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போர் என்றால் பூரிக்கும் தோள் வலிமை,
போர்க்களத்தில் எதிரியைக் கொல்வதில் மகிழ்ச்சி
எதிரியை எதிர்த்து வீரச்சாவை அடைவதில் பெருவிருப்பு.
தம் மண்ணுக்காக தம்மையே ஈகம் செய்யும் மனப்பாங்கு

# பண்டைத் தமிழரின் வீரப் போர்க்கலை

— பெருங்கடுங்கோ —

விலங்குகள் → காட்டுவாசிகள் → பண்பாடடைந்த மக்கள் என்ற பல்வேறுபட்ட நிலைகளின் வளர்ச்சிப்போக்கில் காலத்திற்குக் காலம் போர்கள் வேறுபட்ட வடிவங்களில் இடம்பெற்றே வந்துள்ளன. மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கேற்பப் போர்க்கருவிகளும், போர் முறைகளும் போரின் குறிக்கோள்களும் மாற்றம் பெற்றே வரலாயின.

மக்களாட்சி பெரிதும் இடம்பெறுகின்ற இக்காலகட்டத்திலே போர்க்கருவி உற்பத்தியும் போர்களும் வேண்டப்படாதனவாக இருந்தபோதிலும், இவ்விரு செயல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பண்டைய அரசியல் அமைப்பு முறையில் போர்கள் தவிர்க்க முடியாதனவாகவும், களிப்புத்தரும் மறச் செயல்களாகவும் அமையலாயின. அக்காலநிலையில், அரச ஆணைக்குட்பட்டனவாகவும் மக்கள் நிலையாக வாழ்வதற்கு இன்றியமையாத ஒரு நடைமுறையாகவும் போர்கள் காணப்பட்டன.

போரினால் பெற்ற சாதனைகளே ஒரு நாட்டின் அரசியல் பலத்தையும் பண்பாட்டு வளர்ச்சியையும் உணர்ந்து கொள்வதற்குரிய அளவுகோல்களாக அமைந்துவிடுகின்றன. இன்றைய காலகட்டத்தில் உலகில் எந்த நாடு பெருமளவு அணுக்குண்டுகளையும் போர் விமானங்களையும் கொண்டுள்ளதோ அந்நாடு உலக அரசியல் அரங்கில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றமையைக் காண்கின்றோம். போர் அனைவராலும் வெறுக்கப்பட்ட போதிலும் உலகில் எந்த அரசும் இராணுவ அமைப்பின்றித் தம் அரசியலை, நடத்தியதே இல்லை. அன்றியும் அனைத்து நாடுகளினது தேசிய தினவிழாக்களிலே முதன்மை நிகழ்ச்சியாக அவ்வந் நாட்டுப் படைப்பலத்தைப் வெளிக்காட்டும் அணிவகுப்புக்கள் இடம் பெறுதல் கண்கூடு எனவே போர் என்பது மனித பண்பாட்டு வரலாற்றிலே இடம்பெற்று வந்த மிக இன்றியமையாத ஒரு நிகழ்ச்சி என்பது உறுதியாகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்டைத்தமிழர் பண்பாட்டிலே இடம் பெற்ற போர் முறைகள், போர்முறைக் கோட்பாடுகள், போர்க் கருவிகள், காவல் அரண்கள், கோட்டைகள் முதலியன பற்றி ஆராயும்போது, அதனூடாக அக்கால மக்களின் பண்பாட்டுக் கோலங்களும் துலங்கவே செய்கின்றன.

சேரன் செங்குட்டுவன், சோழன் திருமாவளவன், இமயவரம்பன் நெடுஞ்செழியன் என்னும் மூன்று மன்னர்களும் தமிழ் நாட்டிலிருந்து வடக்கே இமயம்வரை படை எடுத்துச் சென்று, பகை மன்னரை வென்று வெற்றியோடு திரும்பிய செய்திகளைப் பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் என்பன கூறுகின்றன. இது போன்றே கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் தன் கடற்படை மூலம் பகைவரது கடற்படைகளைத் தோல்வியுறச் செய்த வீரச் செய்திகளும் பதிற்றுப்பத்திற் காணப்படுகின்றன. இவ்விரு செய்திகளும் அக்கால மக்களின் படை வலிமையையும் பொருளாதார மேற்பாட்டையும் உணர்த்துகின்றன.

சங்ககாலத் தமிழ்மன்னர்கள் தம் நாட்டின் எல்லையுட் பகைவர் எளிதில் நுழைந்திடாவண்ணம் காவல் அரண்களை அமைத்திருந்தனர். அவை இயற்கை அரண்களாகவும், செயற்கை அரண்களாகவும் அமையலாயின. தமிழகத்தைப் பொறுத்தவரையில் வடக்கே விந்தியமலை அரண்களும் ஏனைய மூன்று பகுதிகளும் கடல் அரண்களையும் கொண்டிருந்தமையால் வெளி நாட்டுப் படை எடுப்புக்களால் பெரிதும் பாதிப்படையவில்லை.

முடியுடை மூவேந்தர் காலத்தில் சேர, சோழ பாண்டியரில் ஒருவர் தலைமை அரசனாக மேலாண்மை செலுத்த முற்பட்ட காலங்களில் இவர்களிடையே பெரும் போர்கள் நடைபெற்றிருக்கின்றன. இதனால் ஒவ்வொரு மன்னனும் தன்னாட்டெல்லைகளிலும், நாட்டினுள்ளும் காவல் அரண்களைப் பலப்படுத்தி வைத்திருந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகளுள. அரண்கள் தோறும் தற்காப்புப் படைகளும் (Defensive forccs) பாசறைகளில் போர்க்களம் செல்லும் படையணிகளும் (Offensive forces) அவர்களிடம் இருந்தன.

இப்படைகள் காலாட்படை, குதிரைப் படை, யானைப்படை, தேர்ப்படை என நான்கு பிரிவினவாக அமைக்கப்பட்டிருந்தன.

நாற்படையுடன் படை எடுத்து வரும் அரசனை மாற்றரசன் தானும் அவ்வாறே நாற்படைகளுடன் சென்று எதிர்த்துப் போரிட வேண்டிய நிலையைத் தொல்காப்பியம் புறத்திணையியல் விளக்குகிறது. காலாட்படைப் பிரிவில் வேற்படை, விற்படை, வாட்படை என்ற மூன்று பிரிவுகள் இருந்தன. மற்போர் புரிவோடும் இருந்தனர் என்பதை புறநானூறு 80ஆம் செய்யுள் சான்று படுத்துகின்றது.

போர்வீரர்கள் மழவர், மறவர், பொருநர், பெருஞ்செய்ஆடவர், வில்லோர், எயினர், கணையோர் என்னும் சிறப்புப் பெயர்களால் வழங்கப்படலாயினர்.

போர் எனில் புகலும் தோள்வலிமை கொண்டவர்களாகவும், போர்க்களத்தில் எதிரியைக் காண்பதில் மகிழ்ச்சி கொண்டவர்களாகவும் சங்ககால மறவர்கள் காணப்பட்டனர். எதிரிக்குப் பயந்து ஓடுவதை விட்டு, எதிர்த்து நின்று போரிட்டு வீரச் சாவை அடைவதையே அவர்கள் பெரிதும் விரும்பினர் பகைமன்னனின் படைகளை அழித்து, வெற்றியுடன் திரும்புதலே தமது கடமை என்ற உணர்வுடன் அக்கால மறவர்கள் திகழ்ந்தனர், என்பதை,

"ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்
கடனே (புறம்-80)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என சாத்தந்தையார் பாடுகிறார்.

தம் மண்ணுக்காகத் தம்மையே ஈகம் செய்யும் மனப் பாங்கும், வீரஞ் செறிந்த மானஉணர்வும், அஞ்சா நெஞ்சமும் நாட்டின் புகழ்கருதித் தம் உயிரையே தற்கொடை புரியும் உறுதியும் கொண்டவர்களாக அக்காலத் தமிழ்மறவர் திகழ்ந்தார்கள் என்பதைப் புறநானூறு கூறுகிறது. மேலும் தம் நாட்டுக்குப் போரிடர் அல்லது பழி ஏற்படக் கூடிய செய்கைகளுக்கு உடந்தையாக இருப்பதால் பெரும்பேறு கிடைப்பினும், இழி செயல்களைக் கனவிலும் நினைத்துப் பார்க்காத செயல் மறவர்களாக சங்ககால வீரர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இதனை இளம் வழுதி என்ற புலவர் பின்வரும் வரிகளில் புலப்படுத்துவார்.

'துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்
(புறம்; 182 :4-6)

பண்டைத் தமிழரின் படை அணிகளில் யானைப்படை சிறப்பு இயல்பு கொண்டதாகும். யானைப்படை அணியில் யானை எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வதில் அரசர்கள் அக்கறை கொண்டிருந்தனர். 'பல்யானை வேல கெழுகுட்டுவன்' என்ற சேரமன்னன் பெரும் யானைப்படை வைத்திருந்தான் எனப் பதிற்றுப்பத்து என்ற நூல் செப்புகிறது. இன்றைய தரைப் படைப் போர்முறைகளில் கனரக வாகனங்களில் ஒன்றான 'டாங்கிகள்' அரண்களை உடைத்து முன்னேறப் பயன்படுவது போன்று, பண்டைத் தமிழர் போர்முறையில், பகை மன்னனின் மிக்க உறுதி வாய்ந்த கோட்டைக் கதவுகளை உடைத்து கோட்பினுட் படைகள் புகுவதற்கு யானைப் படைகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. யானைக் கொம்புகளின் நுனிகளில் இரும்பு வளையங்கள் பொருத்தப்பட்டன. அன்றியும் பகைநாட்டு நீர்த்தேக்க அணைக்கட்டுக்களையும் யானைப் படை உடைத்ததாகவும் கூறப்படுகிறது. யானைகள் தம் வாயில் பெருங்கற்களைக் கவ்விச் சென்று தொலைவில் நிற்கும் எதிரிகளின் படையணி மீது துதிக்கையால் கற்களை எடுத்து வீசித் தாக்கும் போர் முறை பற்றியும் சங்க இலக்கியங்களிற் பேசப்படுகின்றது (புறம் 30)

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று கணியன் பூங்குன்றனார் என்றும் புலவர் சங்க காலத்தில் அமைதிக் குரல் எழுப்பிய போதிலும், சங்ககால மன்னரின் ஆட்சியியலில் போர் முரசம் ஓய்வில்லை மக்களும் மன்னரும் போரை வெறுத்ததாகவும் பெரிதாகக் கூறப்படவில்லை. போரில் மறச் செயல் புரிந்தோரை மன்னரும் மக்களும் போற்றினர். போர்முறைகள் நன்கு திட்டமிடப்பட்டிருந்தன. வெட்சிப்போர், தும்பைப்போர், வாகைப்போர் எனப் போர் முறைகள் வகுக்கப் பட்டிருந்தன.

படை அமைப்பு, படைஎடுத்துச் செல்லும் முறைமை, போர் அறிவிப்பு, பாசறை அமைப்பு, போர், போர்க்கள உதவியாளர் வெற்றிக்களிப்பு முதலான விடயங்கள் திட்டமிட்டு வகுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாட்டிலும் தற்காப்புக் காவல் அரண்கள் கோட்டைகள், இயற்கை அரண்கள் என்பன பேணப்பட்டன; தாமே இயங்கும் படைக்கலப் பொறிகளும் காவல் அரண்களில் பொருத்தப் பட்டிருந்தன. இத்தகு போர்முறை அமைப்புக்கள் செம்மையடைவதற்குப் பல நூற்றாண்டுகள் எடுத்திருக்கலாம். இச்செய்திகள் தமிழர் பண்பாட்டின் வளர்ச்சிப் போக்கின் நுட்பங்களை எடுத்துக் காட்டும் ஒரு பகுதியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சகல விதமான பாடசாலை உபகரணங்கள்
இலங்கை, இந்திய இலக்கிய நூல்கள்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அனைத்தையும் எங்களிடம் பெறலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R197



# இலட்சியங்கள் வாழ்கின்றன

மணலாற்றின் எல்லைப் புறத்திலே வளர்ந்து நிற்கும்காட்டு மரங்கள் சலசலத்து ''சுதந்திரம்சுதந்திரம்' என்ற ஓசையை எழுப்பிய வண்ணம் இருக்கின்றன. எதிரிகளின் வரவைக் கண்நோக்கி கைகளிலே துப்பாக்கியுடன் பனிக் குளிர் உடலில் பரவ நானும் என் தோழிகளும் தரையிலே படுத்திருக்கின்றோம். விடிவை வரவேற்கும் பறவையினங்களின் ஒலி காற்றிலேபடர்ந்துவரக் காலைக் கதிரவன், ஒளிக்கிரணங்களைவீசிராஜநடைநடந்து வான வீதியில் வருகின்றான். எனது அணியினரின் காவல் பணி முடிந்ததும் அந்த இடத்திற்குக் வேறு தோழிகள் மாற்றப்பட்டனர். நாம் சிறிது ஓய்விற்காக பாசறை நோக்கி புறப்பட்டோம்.

பாசறையின்ஒரு ஓரத்தில் வீரச்சாவை தழுவி விட்ட தோழன் ஒருவனின் வரலாற்றுபுத்தகத்தில் மூழ்கியபடி இருந்த நான் சிறிது நேரத்தில் கண்ணயர்ந்து விட்டேன். துர்க்காவின்கை என்னில் பட்டதும் துள்ளிக் குதித்து எழுந்தேன். போர் முனையில் இருக்கும் எந்த வீரர்களாயினும் தன்னை மறந்து இருந்து விடக் கூடாது என்பது ஓர்விதி. தூக்கக் கலக்கத்துடன் எழுந்த நான் எனக்கு முன்னே ஓர் கடிதத்துடன் நின்ற துர்க்காவை உற்று நோக்கினேன். அவள் என்னைப் பார்த்தபடி கடிதத்தை நீட்டினாள். வாங்கிப் பிரித்த நான் சிறிய நேரம் சிலையானேன்.

''கவலைப் படாதே! எல்லோருக்கும் நடப்பது தான். உன்னை உடனடியாகப் புறப்பட்டுச் செல்லட்டாம்'' என்றாள் துர்க்கா. ஒழுங்குகள் எல்லாவற்றையும் அவளே கவனித்துள்ளாள் என்பது எனக்குப் புலனாகியது.

பத்துமாதம் என்னைச் சுமந்து பெற்ற என்தாய் இவ்வுலகைவிட்டு மறைந்து விட்டாள். அவளின் உயிரற்ற உடல் எனக்காக இந்த மண்ணிலே காத்துக் கிடக்கின்றது. அவளை இறுதி நேரம் இறுதியாக நான் போய் பார்க்க வேண்டும். என்னதான் இருந்தாலும் போர்முனையிலே திடங் கொண்ட நெஞ்சுறுதியுடன் எதிரியுடன் போர் புரிந்தாலும் என் அன்னையைஇழந்து விட்டேனே என்ற அந்த நினைவு தாங்க முடியாமல் இதயத்தை அழுத்தியது. கடந்தகால

**ரமணன்**

www.tamilarangam.net



அவளின் வாழ்க்கை...எனக்காக அவள் பட்ட இன்னல்கள்......... மனம் வெந்து அழுதது. என் நிலையை என்னுடனே இருந்து கவனித்த துர்க்கா ஏதோ ஆறுதல் வார்த்தைகள் சொல்லுகின்றாள். அவை ஒன்றும் என் மனதில் பதியவில்லை. என்மனதில் என் அம்மாவின் உருவம் தான் நிறைந்திருந்தது. கண்ணீர் என்னை அறியாமலே கன்னத்தில் வழிந்தது.

''என்ன ஜெயந்தி குழந்தைப்பிள்ளை மாதிரி...... அழாதையும் நீர் ஒரு திடங்கொண்ட விடுதலைப்புலி வீராங்கனை என்பதை மறந்துவிட்டீரா? எத்தனை சாவுகளை கண்ணெதிரே கண்ட நீர், இப்படி கலங்கக் கூடாது'' என் தோழி துர்க்காவின் குரல் எனக்கு இப்போது தெளிவாகக் கேட்கின்றது.

வாகனத்தில் எப்படி ஏறி அமர்ந்தோம், பலமைல்களுக்கப்பால் உள்ள குழமுனைக் கிராமத்தை எப்படி அணமித்தோம் என்பது எனக்கு தெரியவில்லை. அழகிய அந்தக் கிராமம் இராட்சதப் பிறவிகளால் வானிலிருந்தே சிதைக்கப்பட்டிருந்தது. வீடு வாசல்கள் இடிந்தும் விழுந்தும், கால்நடைகள் இறந்தும் கிடந்தன. வாசலில் கட்டப்பட்டிருந்த வாழையும், தோரணங்களும் என் வீட்டில் நடந்த இழப்பு நிகழ்வை வெளிப்படுத்தின. எமது வாகனம்போய் நின்றதும் என் தோழிகளும் நானும் இறங்கி வளவினுள் சென்றோம். உறவினர்களில் சிலரும் மற்றும் பலரும் எம்மை எட்டிப் பார்த்தனர். அவர்களின் முகங்கள் காய்ந்து வரண்டு சோகமாக காட்சியளித்தன. என்னைச்சூழ்ந்து கொண்ட உறவினர்கள் ஒப்பாரி வைத்து அழுதார்கள். பறை மேளம் முழங்கியபடி இருந்தது. அம்மா - அழகான வெள்ளை ஆடையில் மாலுக்குள் இருந்த கட்டிலில் படுத்திருந்தாள். அவளின் முகத்தில் நான் காலங்காலமாக பார்த்த ஏக்கம் விலகாமல் படிந்து போய் கிடந்தது.

சுற்றி வரப்பலர் தத்தம் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். அம்மாவின் முகத்தைப் பார்த்து அழுது தீர்த்த நான் நிமிர்ந்தேன். என் முன்னே என் தாயின் தமையனார், என் மாமா சிதம்பர முதலியார் விசும்பி அழுது கொண்டிருந்தார். மாமா...இப்படி..என்னால் நம்பமுடியவில்லை. என் மாமாவைப் பார்த்து,

''மாமா கொஞ்சநேரம் இப்படி வாங்கோ'' என்றேன். என்னைப் பின் தொடர்ந்தவர்.

''என்னபிள்ளை என்ன சங்கதி'' என்றார். சொல்ல வந்ததை சொல்லத் தெரியாமல் நான் மௌனமாக நின்றேன் - மாமாவே தொடர்ந்தார்.

''எங்கட குலம் பலரால் பாராட்டப் பெற்ற முதலியார் பரம்பரையில் வந்த வெள்ளாளர் குலமென்டு எல்லோருக்கும் தெரியும்'' பிள்ளை. இந்த ஊரிலே ஒருவருக்கும் செய்யாத முறையிலே இந்தச் சாவீட்டை நடத்திக் காட்டிறன்பார், என்று பெருமை பேசியபடி என்னைப் பார்த்தார். அவரின் அந்த வார்த்தைகளை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. எனக்கு வந்த கோபத்திற்கு என்ன செய்வதென்றே தெரியாமல் சிறிது நேரம் அமைதியானேன்.

''என்னபிள்ளை நேரம் போச்சுதெல்லே - இஞ்ச தம்பி அந்தோனியைப் பிடிச்சு பொம்பிளையளைக் கூட்டிக் கொண்டு போய் குளிப்பாட்டுற வேலையைக் கவனியுங்கோ'' மாமா சுறுசுறுப்பாக நின்றார். ஒரு சுருட்டை எடுத்து பற்ற வைத்தபடி என்னைப் பார்த்து

''பிள்ளை உப்படி பேசாமல் இருந்தால் நான் என்னசெய்கிறது'' என்றார் புகையைவிட்டபடி. வறுமையில் வாடிய போது எம்மை வந்து எட்டிப் பார்க்காத இந்த மாமா இப்ப எனது அம்மாவின் சாவில் தமது புகழை நிலைநாட்ட துடிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிறார். என்னுள் ஒரு வேதனைச் சிரிப்பை உதிர்த்த நான்'' மாமா இந்த சமுதாயத்தில் சாதி ஒழிப்பை மேற்கொண்டு அடிமைத் தொழில்களை எல்லாம் அடியோடு ஒழிக்க வேணும் எண்ட ஓர் கொள்கையை நாங்கள் மக்களின் முன் வைத்துள்ளோம். சனமும் இப்ப இதுகளை கைவிட்டு வருகின்றார்கள். இப்படி ஒரு நல்ல காலம் மலர்ந்து வரேக்கை அது என்ர அம்மாவின் சாவால் அடியோடு மாறக்கூடாது.

என்நெஞ்சத்து உணர்வுகளை கொட்டிவிட்டு மாமாவைப் பார்த்தேன். முகத்தில கோபம் பொங்க ''பிள்ளை நான் ஆருக்கு இதுகள் எல்லாம் செய்தனான். உன்ரை அம்மாவுக்கு என்ர தங்கச்சிக்கு. அதில உனக்கு விருப்பம் இல்லையென்டால் நான் இதில நிக்க விரும்பேல்ல'' என்றபடி துவாயை உதறி தோளில் போட்டுக் கொண்டார். போட்ட வெத்திலையையும் காறித்துப்பி விட்டு, 'லெச்சுமி இனி ஒரு நிமிசம் கூட இஞ்ச நிக்கக் கூடாது என்று கர்ச்சித்தார். மாமாவின் குரல் கேட்டவுடன் மாமியும் பிள்ளைகளும் இன்னும் சிலரும் அவர் பின்னே சென்றார்கள். அவர்கள் ஏன் செல்லுகின்றார்கள் என்ற கேள்வியை அங்கே நின்றவர்கள் பார்வையால் கேட்டனர்.

'நாட்டில் சமுதாயமறுமலர்ச்சியை ஏற்படுத்துங்கள் சாதி அடிப்படை தொழில்களை கைவிட்டு சமதர்ம பாதைக்கு வாருங்கள். புதிய சமுதாயம் ஒன்றைப் படைக்க ஒன்றுபடுங்கள்' என்று குரல் கொடுக்கும் நாங்களே அதை செயல் படுத்தாமல் விடக் கூடாது. அப்படி விட்டோமானால் மக்களால் என்றோ ஒரு நாள் தூக்கி வீசப்படுவோம் என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பே இப்போ மாமா என்னையும் என் தாயையும் விட்டுப்போகின்றார் என்ற உண்மை எத்தனை பேருக்குப் புரியும். அங்கே நின்ற சிலருடன் என் அம்மாவுக்கு செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகளை செய்வதற்கு ஆயத்தமானேன்.

''கொள்ளி யார் வைக்கிறது'' ஆரோ ஒருவர் கத்தினார். மாமாவும் போய்விட்டார் மாமா நின்றிருந்தால் - காலம் முழுவதும் அம்மாவை வேதனைப் படுத்திய மாமாவே அவளுக்கு தீயும் இட்டிருப்பார்.

''ஏன் நான் நிக்கிறன்' என்னையும் அறியாமல் எனது வார்த்தைகள் வெளியில் வந்தன. சுற்றி நின்றவர்கள் அதிசயமாகப்பார்த்தார்கள். அம்மாவின் பிள்ளை நான் என்னைவிட அம்மாவிற்கு தீயிட அங்கு எவருக்கும் தகுதி இல்லை.

அம்மாவின் இறுதிப் பயணம் தொடர்ந்தது.

போராளிகளின்கடமை நாட்டைக் காப்பது மட்டுமல்ல - புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதும் அவர்களின் கடமையே, சம்பிரதாயங்களும் சில சமூக பழக்க வழக்கங்களும் எம்மை அறியாமை இருளினுள் தள்ளி விடுகின்றன.

அம்மா சிதையில் கிடந்தாள். இந்த உலகத்தில் எனக்கு கண்ணாக இருந்து என் எல்லாமாகவே இருந்த அம்மா ...தீயுடன்......நான் அழுதேன். என்னால் இயலுமட்டும் அழுதேன்.

தீ...அம்மாவின் சிதையில்...என் கைகள் நடுங்கியது. உள்ளம் வேதனையால் துடித்தது. ஆனாலும் என் உள்ளத்தில் புதிய உணர்வு ஒன்று ஆக்கிரமித்து நின்றது.

பெண் இனம் விழிப்புற காலம் காலமாக மனித இனம் கடைப்பிடித்து வந்த சம்பிரதாயம் என்னால் மாற்றப்பட்டது என்றபெருமையில் என்னை நான் மறந்து நின்றேன்.

□□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நவீன
அழகிய
தங்க
ஆபரணங்களுக்கு

அருணா
ஆபரண மாளிகை
177, B, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஆன் றணசிங்ஹறவின் ஆறு கவிதைகள்

பல சர்வதேச கவிதைப் போட்டிகளில் பரிசுபெற்ற பெண்மணி ஆன் றணசிங்ஹ ஜேர்மனியில் பிறந்த யூதப் பெண்ணான இவர் இரண்டாம் உலகப் போர் மூளும் நிலையில், தமது 13 வயதில், ஹிட்லரின் இன ஒழிப்பிலிருந்து தப்பி இங்கிலாந்துக்கு ஓடினார்.

ஹிட்லரின் வதை முகாம்களில் கொல்லப் பட்ட ஆறுமில்லியன் யூதர்களில் இவருடைய பெற்றோரும் அடங்குவர்.

தமக்கும் தம் இனத்துக்கும் நடந்த கொடுமைகளை 'சங்காரம்' என்ற தலைப்பில் கவிதைகளாகத்தரும் ஆன் எதையும் மறக்கத் தயாராய் இல்லை; மாறாக, 'நினைவே நமது கேடயம்' என்கிறார்.

ஒரு சிங்களப் பேராசிரியரை மணந்து, இலங்கையில் வாழும் ஆனுடைய கவிதைகளை, உணர்ச்சி படைத்த எவராலும், நெஞ்சு துடிக்காமல், கண்ணீர் சிந்தாமல் படிப்பது அசாத்தியம்.

இக்கவிதைகளைத் தமிழாக்கம் செய்து தருகிறார் கவிஞர் சோ. ப.

## சங்காரம் 1944

1938 நவம்பர் 9 ஆனுடைய வீட்டை ஹிட்லரின் ரகசிய பொலிஸ் தாக்கியது. தமது எதிர்காலம் சோதனைமிக்கதாவதை உணர்ந்த பெற்றோர், ஆனை வெளியே அனுப்ப முடிவு செய்தனர். தாயும் மகளும் முத்தமிட்டுப் பிரியாவிடைபெற்றனர். தந்தை எல்லை வரை சென்றார். அது நிரந்தர பிரிவாயிற்று

பெற்றோர் 1941 இல் போலந்திலுள்ள லொட்ஸ் முகாமுக்கும், 1944 இல் ஒஷ்விற்ஜுக்கும் மாற்றப்பட்டனர். இருவரும் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்ற விபரம் தெரியவில்லை. ஆனால் ஆனுடைய கற்பனையில் தன் தாயின் இறுதிப் பொழுது......

### என் அம்மாவுக்கு......

எந்தக்
கண்காணாத் தூரத்தில்
உன்னைப் புதைத்தார்களோ!
எந்த
சுள்ளென்ற வாடைக்காற்று
கோதுமை ஒட்டின் மீது-
உன் புதைகுழி மீதுள்ள
காய்ந்த
கோதுமை ஒட்டின் மீது-
வீசுகிறதோ
அறியேன், அம்மா!

ஈயமாய்க் கவிந்த
வானத்தின் கீழே
மார்கழி மாதத்துக் காலைப்பொழுதில்
பனியால் நனைந்து,
நடுங்கியபடி,
அம்மணமாய்,
அன்னாய்!
நீ நடந்த
அவ்விறுதிப் பொழுதில்,
என்ன நினைத்தாயோ!
அம்மா,
என்னை நினைத்தாயோ!

ஓ,
உன்னை
எனக்கு
நினைவிருக்கு தென்னுயிரே!
மெழுகுதிரிக்கு மேலே
மெலிந்த கைகளை விரித்தபடி,
கண்கள் ஒளிவீச,
என்னை ஆசீர்வதித்தாய் -
ஆண்டவர்க்கு மங்களங்கள்!

அங்கே தான், அம்மா
வேதனை - வெப்பியாரம்!
உன் மரணம்
தியாகமாய் இல்லாது
விழலாய் - வியர்த்தமாய்
எதன் முடிவாகவுமில்லாது,
எதன் தொடக்கமாகவுமில்லாது,
விழலாய் - வியர்த்தமாய்

இரத்தக்கண்ணீர் வடிக்கின்றேன்
தாயே!

ஆம், உன்
இரத்தக் கண்ணீர் வடிக்கின்றேன
அம்மா!

## 2 ஆன்றணசிங்ஹாவின் ஆறுகவிதைகள்.

ஒஷ்விற்ஜ், ட்றெப்லின்கா இரண்டும் ஹிட்லரின் இனக் கொலை முகாம்களில், பிரசித்தி பெற்றவை. லட்சக்கணக்கில் மனிதர்களைக் கொல்வதை, அவர்கள் உடைமைகளை ஒழுங்காகச் சேகரிப்பதை, அவர்கள் உடல்களை பாரிய உலோக உலைமுகங்களில் எரிப்பதை ஒரு கலையாகச் செய்த கொடுமை அடுத்து வரும் இருகவிதைகளில் சித்திரிக்கப்படுகிறது.

## மன்னிக்க வேண்டும்

மன்னிக்க வேண்டும்
உன் கேள்விக்கு
என்னிடம் பதிலில்லை!
அநீதியும், வெறுப்பும் போரும்
கோலோச்ச,
சமத்துவம்
வெறும் கோஷமாகிவிட்டது!

ஹிரோஷிமாவின்
காளான் முகிலும்
''ஒஷ்விற்ஜ்'' புகைபோக்கிகளில்
இருந்து
மிதந்து வரும்
புகை மண்டலமும்,
என் பார்வையை
மறைக்கின்றன.

இறந்தகாலம் என
ஒன்றில்லை
வெடித்த கண்ணாடிகளில் தெரியும்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பால் வடியும் முகங்கள்-
கண்ணீரால்
கலங்கலான உருவங்கள்

எதிர்காலம்?
வண்டிகள்
ஒவ்வொன்றாக
புறப்படுகையில
ரயில் நிலையத்தில் நான்-
நிரந்தரமாகவே
கையசைத்தபடி.

பாதுகாப்பில்லை,
புகலிடமில்லை
அறிவேன்.

பொன்
விலை ஏறும், இறங்கும்;
வைரமும் விடும் அப்படியே
நூல்கள் எரிக்கப்படலாம்
உறவுகள் பிரிக்கப்படலாம்

சித்திரவதை,
சிறை
தண்டம்-
யாவும் கடவுள் பேரால்-
புனிதமாகி விட்டன

'இஸம்'கள் உலகைப்
பங்கு போடுகின்றன
அவர்களுடைய
சின்னங்களின்
கூரிய முட்களிலிருந்து
இரத்தம் சொட்டுகிறது
ஆராய்ச்சிக்கு அப்பால்
சமாதி ஒன்றே
சாசுவதமாகிறது

முன்பு கேளாத,
அண்டங்காக்கை
கரையும் ஒலி
அதிகமாய்,
அபசுரமாய்.,
கதவு மூடும் சத்தம்.

## 3 ஆன்றணசிங்ஹவின் ஆறு கவிதைகள்.

# யாருக்கு நினைவிருக்கிறது?

உழாத தரையை
வருடும் காற்றை,
புல்லை வளரத் தூண்டும்
வெயிலை,
யாருக்கு நினைவிருக்கிறது?

ஒவ்வொரு வசந்தத்திலும்
குளிர்ந்த கண்ணீர் பொசியும்
வெண்பனியை,
மறந்துபோன எட்டுலட்சம் பேரின்
மரணங்களை,
யாருக்கு நினைவிருக்கிறது?

ஏற்பாடுகள் செய்வதில்
வல்லவர்கள் ஜேர்மானியர்கள்
இறக்கம்,
புறப்பாடு,
இடையில் நாற்பத்தைந்து நிமிடம்
- மட்டுமே
தங்கப்பல் மீட்கப்பட,
மயிர் களையப்பட,
உடைகள் தரம்பிரிக்கப்பட,
நீண்ட அகழிகளில்
உடல்கள் புதைக்கப்பட,
நாற்பத்தைந்து நிமிடங்கள் மட்டுமே!

அகழிகளைத் தோண்டும்
நீண்ட உருக்குக் கரங்களை,
ஆழப்போய்
நிணம் சேரும் பிணங்களை
வாரிவரும்
முள் இடுக்கிகள்,
உருக்குலைந்த உடல்களை
அங்காந்த
உருக்கு வாய்களுள் போட,

www.tamilarangam.net



அவை,
வான்நோக்கி எழுந்து.
தயங்கி.
நடுங்கிய பின்.
தமது சுமையை
கீழே எரியும்
ஜுவாலையுள் வீச-
யாருக்கு நினைவிருக்கிறது?

மிரண்ட கண்களுடைய பையன்கள்,
குழந்தையைத் தாலாட்டும் தாய்.
பிரார்த்தனை செய்வதற்கு
நடுங்கும் கைகளால்
தன் மேலங்கியைத் தேடும்
நிர்வாணமான கிழவன்.

மெல்லிடையும்
நிமிர்ந்த முலைகளுமாய்
காதலுக்குத் தயாரான
அவ்வழகிய கன்னி,
யாருக்கு நினைவிருக்கிறது?

அகழிகளை,
சாம்பல் கொண்டு தூருங்கள்
உழவு சால்களை
மட்டந்தட்டி
புல்லை,
மரங்களை,
பூக்களை
நடுங்கள்
வெண்மையான
நடைபாதைகள் அமையுங்கள்!
வாங்குகள் போடுங்கள்-
பொதுப் பூங்கா!

பூக்கள் மலரும்.
நினைவுகள் இரா.
சுவடே இராது
சாவு மட்டுமல்ல,
சர்வ சங்காரம்.
சூன்யம்.
ஈற்றில்-
பாதாளம்!

## 4 ஆன் ரணசிங்ஹவின் ஆறுகவிதைகள்.

தன் தந்தையின் நினைவாக ஆனிடம் மிஞ்சியிருப்பது ஒரு பழைய நிழற்படம். அதுவும் சிறுமி ஆன் எடுத்த நிழற்படம். தந்தைக்கும் தனக்கும் இடையில் தன் நிழல் விழுந்தது பற்றி பது இக்கவிதை

### அப்பா

அப்பா,
கனத்த கறுப்புக் 'கோற்' அணிந்தபடி.
மரத்தில் சாய்ந்தபடி,
நீங்கள்.
பனிக்கட்டி மிதக்கும் குளம்.
குளிரில் சிக்கி
விறைத்துச் செத்து
மிதக்கும். சிறிய
வாத்துக்கள் இரண்டு!

இந்தப் படத்தை
எடுக்கும் போது
சூரியன் என் பின்னே.
நான் அறிந்திருக்க நியாயமில்லை.
அது.
ஒரு
கடைசிச் சோக ஆவணம் என்று!

இந்தப் படத்தை எடுக்கும் போது
பின்னால் இருந்த குளிர்ந்த சூரியன்
என் நிழலை
நீளப் பரப்புகிறது!
நிழலோ நம் இருவருக்கும் இடையில்
மெல்லிய,
களங்கமற்ற
வெண்பனியில்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அப்பா,
நீங்கள் புன்னகைப்பதாயில்லை
சூரிய ஒளியில்
கண் கூசுகிறதா
அல்லது
இப்போது நினைத்துப் பார்க்கிறேன்
உங்கள் உள்ளுணர்வுசொல்லிற்றோ!

## 5 ஆன் றணசிங்ஹவின் ஆறு கவிதைகள்

1983 ஜூலையில் இடம் பெற்ற இனக்கலவரங்களைக் காணநேர்ந்த ஆனுக்த கொலை, கொள்ளை, தீவைப்பு - எல்லாம் ஒழுங்குசெய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட விதத்தைப் பார்க்க ஹிட்லருடைய ஜேர்மனியின் ஞாபகம், உள்ளூர ஒரு நடுக்கம்; அவமானம்!

### ஜூலை 83

படுகொலைகளைப்
பார்த்துக் களித்த
நாஜிகள் பற்றி
நான் நினைத்துப் பார்ப்பதுண்டு
அத்தனை நெஞ்சும் கண்களும்
அவர்கள் நாட்களுடும்
வருடங்களுடும்
மின்னலாய்க்
குத்துவதில்லையா?

சாகுமுன்
ஆதரவற்று
அழுதுகுழறும்
அநாதைக் குழந்தைகளின்
குரல்கள்
அவர்கள் இரவுகளைக்
கொள்ளையிடுவதில்லையா?

வேதனையும் ஆற்றாமையும்
குருதியும் வலியும் பயங்கரமும்
அவர்கள் மூளைகளில்
தடங்கள் பதிக்க,
தூக்கம் இழந்து
''நான் பாவி, பாவி!''
என அவர்கள்
அலறுவதில்லையா?

நாற்பது வருடங்களின் பின்
மீண்டும் தீச்சுவாலை!
அந்தி வானம்
வன்முறையால்
இரத்தமயமாகிறது!

திருமண உறவால் மட்டும்
தொடர்புடையவள் ஆயினும்,
நான்,
குற்றவாளியாயும்
பாதிக்கப்பட்டவளாயும்
இருப்பதை
உணர்கிறேன்

(கருகிய மரமும்
சலாகைகளும்
ஓடும்
காற்றில் பறக்கின்றன;
ஏதும் மிஞ்சவில்லை)

புகைச்சுருளைக் கண்டு
முகம் சுழிக்கிறேன்
தீயை நினைத்துக்
குறுகிப் போகிறேன்
ஆனால்,
சிலரோ
எரியும் நெருப்பில்
குளிர் காய்கிறார்கள்!

www.tamilarangam.net



## 6 ஆன் றணசிங்ஹவின் ஆறுகவிதைகள்

### கைதி

துருப்பிடித்த தாழ்ப்பாள்களூடு
என் சுதந்திரத்தை,
அஸ்தமிக்கும் சூரியனை,
அளக்கும்
முள்ளுக்கம்பிகள்!
என் தனிமையை ஏந்த முடியாது
சிறிதாகிவிட்ட,
தீப்பிடித்த,
பரந்த வானம்!

இன்றைய சோகம்
இரத்தத்தின்,
வலியின்,
பயங்கரத்தின்
ஆற்றாமையாய்
முடிச்சிடுகிறது!

என்
வேதனையைப் பகிர்ந்து கொள்ள
யாருமில்லாதவாறு
கன்னங்கரிய
விதானமாக
இருள் கவிகிறது.

இவ்வந்தகாரத்தில்,
எனக்காக,
யார்,
விளக்கேற்றுவார்கள்!

● ● ●

● ● ●

வாழ்க்கையை பணயம் வச்சு ஒவ்வொரு கணமும் மரணத்தோட போராடிக்கிட்டிருக்கிற பிரபாகரனும் நீங்களும் ஒன்னா? துப்பாக்கியால் மட்டுந்தான் மனிதர்களுக்கு சாவுன்னு நினைக்காதீர்கள்.

துப்பாக்கி ஏந்திய பிரபாகரன் நூறு வயசு உடல் ஆரோக்கியத்தோடு இருக்கலாம். கதை எழுதுகிற நான் நாளைக்கே மரணமடையலாம் உண்மையில் என்னைவிட பிரபாகரனுக்கு வாழ் நாள் பெரியது.

"எப்படி... எப்படி...

இன்னும் பத்துத் தலைமுறைகளுக்கும் பிரபாகரன் கதை பேசப்படும். சிலையாய், சித்திரமாய், கவிதையாய் உயிர்வாழ முடியும் என் கதைகள் இரண்டு தலைமுறை தாண்டுமா... சந்தேகம் தான்.

தனது நாவல் ஒன்றில்
தென் இந்திய எழுத்தாளர்
"பாலகுமாரன்"

● ● ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இது இன்னொரு பக்கம்

மாலன்

பெண்களைப் பற்றித்தான் சமூகத்தில் எத்தனை வித பிம்பங்கள்? சிலருக்கு தேவதை, சிலருக்கு பிசாசு, ஒரு சமயம் துர்கை, இன்னொரு நாள் தாடகை. ஏதுமறியா பேதை என்று அவள் மீதுபரிதாபம். எதற்கும் இடம்கொடா சர்வாதிகாரி என்று அவள்மீது கடுபகோபம். பெண்களைப் பற்றி எத்தனைவித பிம்பங்கள் சமூகத்தில் நிலவுகின்றனவோ, அத்தனை பிம்பங் களும் பெண் எழுத்தாளர்களைக் குறித்தும் நிலவுகின்றன.

ஆனால், யோசித்துப் பார்த்தால் ஒவ்வொரு பெண்ணுக் குள்ளும் கொஞ்சம் ஆணும், எல்லா ஆண்களுக்குள்ளும் சிறிது பெண்மையும் உண்டென்றே எனக்குத் தோன்றுகிறது.

பெண்கள் எழுத்தாளர்களாக இருப்பது எனக்கு ஒரு போதும் ஆச்சர்யம் தந்ததில்லை. ஆனால், அவர்கள் என்ன எழுதுகிறார்கள் என்பதை யோசிக்கும் போதெல்லாம் ஆயாசம் மேலிடுகிறது.

இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் 14 நாவல்களை எழுதிய பண்டிதை விசாலாட்சி அம்மாளைத்தான் தமிழின் முதல் பெண் எழுத்தாளர் என்று சொல்லத் தோன்றுகிறது. அவர் 1908-ல் எழுதிய சுஜாதாவின் முன்னுரையில் பெண் முன்னேற்றம் தான் தன்னுடைய லட்சியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அன்றிலிருந்து 84 வருடங்களாக பெரும்பாலான பெண் எழுத்தாளர்கள் இந்தக் குறுகிய அறைக்குள்ளேயே கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அறைக்கு வெளியே ஒரு உலகம் இருப்பதையும், தங்களுக்குள்ளே மூடிய பல அறைகள் இருப்பதையும் அவர்களில் பலர் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பெண்களின் சிந்தனை காலங் காலமாக ஆதிக்க சக்திகளால் முடக்கப்பட்டு வந்திருக்கிறது. என்பதில் மறுப்பேதும் இல்லை. ஆனால், இது ஏதோ அவர்களுக்கு மாத்திரம் இழைக்கப்பட்ட அநீதி அல்ல. இளைஞர்கள் கனவுகளாலும், பாமரர்கள்

மாலன்

**இது இன்னொரு பக்கம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இது இன்னொரு பக்கம்

மாலன்

சினிமாக்களாலும், உழைப்பவர்கள் அமைப்பினாலும் சுரண்டப்படுகிற ஒரு சமூகத்தில் பெண்களும் சுரண்டப்படுகிறார்கள். அமைப்பு மொத்தத்தையும் எதிர்த்துப் போரிட வேண்டிய பெண் எழுத்தாளர்கள் தங்களுக்காக மட்டுமே குரல் எழுப்புகிறார்கள் என்பதுதான் சலிப்புதருகிறது.

ஆண்கள் அத்தனை பேரையும் துரோகிகளாகவும், காமுகர்களாகவும் சித்தரிக்கிற பேதமையைக் கண்டு நான் புன்முறுவலிக்கிறேன். ஆணின் சோகங்கள் அந்தரங்கமானவை. பொருள் தேடப்போன இடத்தில் அவன் அவமானப்பட்டு - குறுகுகிற அவலம் கோவலன் காலத்தில் இருந்து நடந்து கொண்டே இருக்கிறது. குடும்பத்திற்காகத் தனது முகத்தை இழந்த ஆயிரம் ஆண்களை நான் அறிவேன். வீட்டுக் குழந்தைகள் வீதிக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக அநீதி என தெரிந்தும் போரிட அஞ்சுகிற ஆண்பிள்ளைகள் அநேகம். தன் வீட்டுப் பெண்கள் பட்டு அணிவதற்காக பழுப்பேறிய நாலு முழம் உடுத்தும் தந்தைகள் உண்டு. கூடப்பிறந்தவளைக் கரையேற்றுவதற்காக கடலில் தத்தளிக்கும் அண்ணன்கள் உண்டு.

இந்த ஆண்களெல்லாம் ஊரறிய உரத்த குரலெடுத்து அழுவதில்லை. குடும்பம் என்றால் கோபம் கொண்டு குமுறுவதில்லை. போகுமிடமெல்லாம் புலம்புவதில்லை. அவர்கள் விடும் பெருமூச்சின் அனல் எழுத்தில் அவ்வப்போது சுடுவதுண்டு. ஆனால் அவை யாரையும் புண்ணாக்கியதில்லை.

ஆனால், இந்த ஆண்கள் ஆவேசமாய் பெண்களுக்காய் வாதிட்டதுண்டு. தமிழ்நாட்டில் பெண் விடுதலைக்காக, பெண்களுக்கு முன்பே குரல் கொடுத்தவனுக்குப் பெரிய மீசை உண்டு. அவன் பெயர் பாரதி, தாழ்வு மனப்பான்மையால் துன்பப்படும்

மாலன்

இது இன்னொரு பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இது இன்னொரு பக்கம்

மாலன்

இளைஞனை சித்தரித்த மாதவய்யா, விதவைப் பெண்ணின் மறுமணத்திற்காக எழுதிக்குவித்தவர். யாருக்காக அழுதான் என இரங்கிய ஜெயகாந்தனின் பேனா தான் கங்கா என்ற கம்பீரத்தைப் படைத்தது. சிற்பியின் நரகத்தை சிருஷ்டித்த புதுமைப்பித்தனின் கைகள்தான் அகலிகையின் சார்பாக ராமனைச் சாடியது. பெண்ணின் செக்ஸ் உரிமையை வற்புறுத்த எழுதிய கு. ப. ரா. வும், ஜானகி ராமனும் எவருடைய உள்ளாடை கொக்கிகளையும் அவிழ்க்கவில்லை. ஆபாசத்திற்கும், இலக்கியத்திற்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரிந்திருந்தது.

தமிழ் இதழியலின் ஒரு காலகட்டத்தில் வெறும் விளம்பர நோக்கத்திற்காகவே பெண் எழுத்தாளர்கள் பயன்படுத்தப்பட்ட சிறுமையும், அதற்கு அவர்கள் சந்தோஷமாகவே சம்மதித்த அவலமும் நடந்தது. அதற்குப் பலியானவர்களை இன்றைக்கும் வாசகர்கள் மன்னிக்கத் தயாராக இல்லை. அங்கம் வர்ணிப்பவர்களை. ஆபாச வியாபாரிகளை - அவர் ஆணாயினும், பெண்ணாயினும் - வாசகர் உலகம் இகழ்ச்சியாகவே எண்ணி வந்திருக்கிறது. இதில் அது பால் வேறுபாடு பாராட்டியதில்லை.

அதே போல வானின் விரிவும், மண்ணின் ஈரமும் கொண்ட மனங்களுக்கு மாலையிட அது தயங்கியதில்லை. தன்னுடைய பிரசினை ஒரு தனி நபர் பிரசினையல்ல. அது அமைப்பின் பிரசினை என அறிந்து அதற்குக் குரல் கொடுத்த பெண் எழுத்தாளர்களை அவமதித்ததில்லை. வீடே உலகமல்ல, உலகம் தான் நம் வீடு என்ற வெளிச்சத்தையும், எதிரியல்ல ஆண், அவன் தோழன்; ஆணும், பெண்ணும் நிகரென கொள்வதால் அறிவிலோங்கி வையம் தழைக்குமாம் என்ற ஆதார உண்மையின் ஒளியையும் நமது எழுத்தாளப் பெண்கள் தரிசிக்கும்போது இங்கு ஆரோக்கியமான இலக்கியம் செழிக்கும். அதை ஆதரிக்கவும், அங்கீகரிக்கவும் ஆண்கள் மட்டுமல்ல, அனைவருமே ஆசை கொள்வர். அதை எனது அடுத்த தலைமுறை சாதிக்கும். □□

நன்றி: - இந்தியாடுடே

மாலன்

இது இன்னொரு பக்கம்

சிறுகதை

# வீர வன்னிச்சி

பட பட பட் பட் பட்டம்... தொடர்ச்சியான வெடிச்சத்தங்கள் அதற்கு மத்தியில் பேரிரைச்சலுடன் வானத்தில் வட்டமிட்டு பீப்பாய் குண்டுகளை உருட்டி வீழ்த்தும் 'அவ்ரோ விமானங்கள், சடசடவென குண்டு மழை பொழியும் இயந்திர வல்லூறுகள். இடையிடையே எங்கிருந்தோ வந்து தொம், தொம், மென விழுந்து வெடிக்கும் எறிகணைகளின் அதிர்வோசை,

அவன் வாழும் குழுமுனைக் கிராமத்தின் அண்மித்த பகுதியில் இருக்கும் அடர்ந்த காட்டுப் பகுதியில், சிறீலங்கா அரசபயங்கரவாதிகள். சத்தியத்தை அழித்து விடலாம் என்ற நப்பாசையுடன் முப்படையின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி மின்னல் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்த வெடி ஓசையையும் இடியோசையையும் கேட்டு வெலவெலத்து நடுங்கும் கோழையல்ல அவன். எத்தனையோ ஆண்டுகளாக எத்தனையோ தடவைகள் இந்தக் காட்டில் உள்ள புலிகளை வேட்டையாட வந்த இராணுவங்களின் வெடிச்சத்தங்களைக் கேட்டுக் கேட்டு பழகிப் போனவன் அவன். இப்போதெல்லாம் அந்தச் சத்தங்களைக் கேட்டு ரசிக்கும் மனோபாவம் பெற்றிருந்தான்.

ஆனால் இன்று இந்த வெடிச்சத்தங்களைக்கேட்டு அவன் நெஞ்சம் பதைபதைத்தது. அந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் நடந்து கொண்டிருக்கும் போரில் தன் அன்பு மகனும் அரச பயங்கரவாதிகளை எதிர்த்து நிற்கிறான் என்பதாலா இந்த அச்சம்? அவன் மகன் மட்டுமா எதிர்த்து நிற்கிறான்....? அவனைப் போல் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளம்புலிகள் எதிர்த்து நிற்கிறார்களே, அத்தனை பேருக்காகவும் அல்லவா அவன் கலங்க வேண்டும்? அதற்காக அவன் அச்சப்பட இல்லை பின் எதற்காக...?

அரச பயங்கரவாதிகள் காலை ஐந்து மணிக்கு தாக்குதலை ஆரம்பித்த சமயத்தில், அவனது அன்பு மனைவிக்கு பிரசவ வேதனையும்தொடங்கிவிட்டது. ஈழத்தாயின் துயரினைத் துடைக்க, புலிக்குட்டி ஒன்று இந்தப் பூமியில் குதிக்க துடித்துக் கொண்டிருக்கும் வேளை. இப்படி பயங்கரமான வெடிச் சத்தங்கள்?...... பெற்றெடுத்த தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கவும் பிறந்த மண்ணின் அடிமை விலங்கினை உடைக்கவும், யுத்த முனையில் வீரமறவர்கள். எதிரிகளின் விமானக்குண்டுவீச்சால் செத்துக் கொண்டிருக்கும் வேளை. இங்கே வித்து ஒன்றை முளையாக்க ஒரு தாயின்

உள்ளமும் உடலும் தவித்துக் கொண்டிருந்தது. தாய் வயிற்றிலிருந்து விடை பெற்று தாயகத்தைப், பார்க்க, வரப்போகும் அந்த குழந்தையை வரவேற்க பரிவோடும். பரபரப்புடனும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அந்தக் கிழவி ..? அதுதான் அவனுடைய தாய். உதிரும்பருவத்திலும் உதிராத நெஞ்சுறுதியோடு காணப்பட்டாள்.

அடிக்கொருதரம் அடுப்படிப் பக்கம் தன் விழிகளைப் பாயவிட்டபடி முற்றத்தில் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டு நின்றான், முக்கி முனகும் மனைவியின் வேதனை ஒலி ஈனஸ்வரமாக அவன்காதில் விழுந்த போது அவன் இதயம் படபடத்தது.

''அம்மா, பிப்பா உருட்டிப் போட்டான் ஒடுங்கோ பங்கருக்கை''... பக்கத்து வளவில் யாரோ சிறுவன் அலறும் ஒலி .. அப்பொழுது தான் புறஉலக நினைவுவந்தவன் போல வானத்தை அண்ணாந்து பார்க்கிறான்., பேரிரைச்சலுடன் அவ்ரோ விமானம் ஒன்று அவன் வீட்டுக்கு மேலால் பறக்கிறது. அதன் பின்னால்... கறுப்பாக ஏதோ ஒன்று தரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஓடிச் சென்று அடுப்படித் திண்ணையில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டான். அவனது உதடுகள் கண்ணன் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தது.


டமார்...... பயங்கர அதிர்வோசை, அதைத் தொடர்ந்து சில வினாடிகள் விஸ்ஸ்... என்ற இரைச்சல் ......கீ......என்ற ஒலியைத் தவிர அவன் காதுகளுக்கு வேறு எதுவும் கேட்கவில்லை. மெல்ல கண்களைத் திறந்தான் எங்கும் ஒரே புகை மண்டலம். புகையின் ஊடாக எதிரே இருந்த மாவின் ஒரு பகுதி சரிந்து தரையைத் தொட்டுக் கொண்டு நிற்பது, மங்கலாகத் தெரிகிறது. அவன் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

பதற்றத்துடன் எழுந்து வாசலை நோக்கி சென்றவன் ஒரு கணம் தயக்கத்துடன் நிற்கிறான். ''அம்மா .....அம்மா......''

உள்ளிருந்து கேட்ட பதில் குரல்...... அவன் உள்ளத்தில் ஒரு பரபரப்பு, முகத்தில் மலர்ச்சி குழந்தையின் அழுகுரல்தான் அது...?

''உள்ளை வாமோனை'' தாயின் அழைப்பு அவன் காதில் விழுகிறது அவன் உள்ளத்தில் ஒரு பிரமிப்பு இந்த வெடிச்சத்தத்தில் தாய் மயங்கி இருப்பாள் என எண்ணி அவன் பயந்திருந்தான். ஒன்றுமே நடவாதவள் போல் எவ்வளவு சாதாரணமாக அழைக்கிறாள்? கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்க்கிறான். மெல்ல முனகியபடி மனைவி படுத்திருக்கிறாள்.

எழுதியவர்



எஸ். நவநீதன்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பக்கத்தில், அவனது தாயின் கரங்களில் அந்தச் சின்னஞ் சிறு மழலை கை காலை அசைக்கிறது உற்றுப்பார்க்கிறான். ஆண்குழந்தை, தாயின் முகத்தை ஏறிட்டு நோக்கினான். அதில் ..... கலக்கம் என்பது துளிகூட காணவில்லை. கைதேர்ந்த மருத்துவிச்சியின் மேலான பாவத்துடன் கடமையில் ஈடுபட்டிருந்தார். மனதிலே ஒரு பெருமிதம். இந்த எண்ணம் கடந்தகால சம்பவங்களை அவன் நினைவுக்கு கொண்டு வந்தன.

ஏழு ஆண்டுகளுக்கு முன், புலிகள் என்றால் வீட்டைப் பூட்டி வெளியேறும் விளக்கம் புரியாத சனங்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்த சமயத்தில், பேரினவாதிகளின் இராணுவங்கள் ஊருராய் சென்று அடாவடித் தனங்கள் புரிந்த கால கட்டத்தில், அச்சப்படாமல் அன்புடன் அவர்களை வரவேற்று தேவைகளை பூர்த்தி செய்து இரகசியங்களை காப்பாற்றி வந்தவள் அவன் அன்னை. சிறீலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் எமது எல்லைப் பிரதேசங்களில் குடி அமர்த்தப்பட்டிருந்த சிங்களக் காடையர்களை விரட்டி அடிப்பதற்கு ஆதரவும், ஆதாரமாயும் விளங்கியது அந்தக் கிராமந்தான். இன்றுவரை எத்தனையோ தடவைகள் ராணுவத்தின் மிலேச்சத்தனமான நடவடிக்கையால் அவ்வூர் மக்கள் இடம் பெயர்ந்து இருக்கிறார்கள்.

பெரிய அளவிலான இராணுவ தாக்குதல்களுக்கு இலக்காய், மூலகமாக விளங்கிய அந்தக் கிராமத்தை சிங்கள இராணுவத்தினர் கொட்டியா முகாம் (புலி முகாம்) என்றே இன்றும் சொல்லுவர்.

"ஐயா .....ஐயா......" வெளியே யாரோ அழைக்கும் குரல் அவன் சிந்தனையை துண்டித்தது. அவசரமாக வெளியே வந்தான். அவனைக் கண்டதும் தெருவில் நின்றிருந்த போராளிகள் இருவரும் உள்ளே வந்தனர். வெடிச்சத்தங்களும் விமானச் சத்தங்களும் ஓய்ந்திருந்தன.

"ஐயா..." சிறிது தயங்கினான் அவன். பின் சொன்னான்" உங்கள் மகன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டான் ஐயா......" மலர்ந்திருந்த அவனது முகம் பட்டென வாடியது. துள்ளிக் குதித்த அவன் உள்ளம் துவண்டு சோர்ந்தது.

"பின்னேரம் பூதவுடல் வரும் நாங்கள் போயிட்டு வாறம் "ஐயா" சொன்னவர்கள் திரும்பி நடந்தார்கள்.

அவன் உள்ளத்திலே பெரும் அதிர்ச்சி, பச்சை உடம்போடு படுத்திருக்கும் தன் மனைவிக்கு இதை தெரியப்படுத்தினால் அவள் இதயம் தாங்குமா......? இறைவா எனக்கேன் இந்த சோதனை அவன் உள்ளம் அழுதது...

"இஞ்சை ஒருக்கா வாமோனை." உள்ளே இருந்து வந்த தாயாரின் குரல் கேட்டு, பொங்கி வந்த கண்ணீரை அழுத்தித் துடைத்தபடியே உள்ளே செல்கிறான்.

நேராக மனைவி மீது அவன் பார்வை விழுகிறது. முகத்தில் மெல்லிய புன்னகை தவழ அவனை கண்களால் பக்கத்தில் வரும்படி அழைக்கிறாள். பக்கத்தில் போய் அமர்ந்த அவன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்க சக்தி அற்றவனாய் அண்ணாந்து மேலே பார்க்கிறான். கவலையை மறைக்க அவன் கண்களால் இயலவில்லை அது கண்ணீரைச் சிந்துகிறது.

"இஞ்சருங்கோ, ஏன் இப்ப அழுறீங்கள்" தனது வலக்கரத்தை மெல்லத் தூக்கி அவனது விழிகளை ஆதரவுடன் துடைக்கிறாள். "அதை இப்ப நீ அறிந்தால் உன் இதயம் தாங்காது அம்மா" அவளைப் பரிதாபமாகப் பார்க்கிறான் அவன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இஞ்சருங்கோ எங்கடை வரிலை இன்டைக்கு நாங்கள் அச்சமின்றி வாழ்றதுக்கு ஆதாரமாய் இருந்த காண்டீபன் லோறன்ஸ், சபா, லலித் இவர்களை இழந்த போது தாங்கிக் கொண்ட இந்த இதயம் என்ரை பிள்ளையை இழந்திட்டால் மட்டும் உடைஞ்சா போயிடும்" என்றாள் அவள்.

அவன் முகத்தில் மின்னலென ஒரு அதிர்ச்சி வியப்பு மேலிட்ட விழிகளால் அவளைக் கூர்ந்து நோக்கினான். உறுதி என்ற சொல்லுக்கே உறுதி கொடுக்கும் உள்ளம் அல்லவா அவளுடையது.

"ம்...... இதெல்லாம் அவன் செயல். ஒண்டை வரவுவச்சு ஒண்டை செலவு வைச்சட்டான்" தாயாரின் வாயில் இருந்து வந்த தத்துவம் இது.

மதயானையை பிடித்துக் கட்டிய மாதரசி அரியாத்தா இந்தப் பிரதேசத்தில் தானாம் பிறந்து வளர்ந்தவள். பலர் சொல்லக் கேட்டிருக்கிறான் அவன். அவை உண்மையென உறுதிப்படுத்தும் சாட்சிகள் போல் அவன் தாயும் தாரமும் அவன் கண்முன்னே காட்சி அளித்தார்கள். தனக்கு தாயாகவும் தாரமாகவும் கிடைக்கப்பெற்ற அந்த வீர வன்னிச்சிகளை மாறி மாறிப் பார்க்கிறான் □

●

●

இத்தாலிய எழுத்தாளர் அல்பட்டோ மொறாவியா எழுதிய "இரு பெண்கள்" நாவலில் இருந்து

...இரண்டாவது உலகப்போரின் போது ரோம்நகரின் ஒரு ஏழை விதவை தன் மகளுடன் யுத்தத்தின் விளைவுகளுக்குப் பயந்து மனலப் பிரதேசத்துக்கு ஓடியபோது நிகழ்ந்தவை.

எங்கும் அமைதி. ஆனால் ஈரு இரவின் அமைதி இல்லை. கிராமப்புறம் பொதுவாக ஆகிலை விட்டு எழும்பிக் கொண்டிருந்தது. நான் முன்செல்ல என் மகள் எனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தாள். எங்கள் இருவர் கையிலும் ஒவ்வோர் சூட்கேஸ் இருந்தது. மலைப்புறத்தை நோக்கும்போது எனக்கு நம்பிக்கை தோன்றியது. நான் மலைப்புறத்தை பிறப்பிடமாக கொண்டவள். ஆகவே அங்கு சென்றவுடன் என்ன என்ன இருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. அங்கு பயிர் செய்யப்பட்ட நிலங்கள், குடிசைகள், விவசாயிகள், இடம் பெயர்ந்தவர்கள் நல்ல பொருட்கள் எல்லாம் காணலாம் என்று நான் எனக்குள்ளே எண்ணிக் கொண்டிருந்தேன்.

சூரிய ஒளி தந்த உற்சாகத்தால் உந்தப்பட்டு நான் இங்கு யுத்தம் நடக்கிறது என்று யார் சொல்வார்கள் என்று சொல்லி வாய் மூடவில்லை குண்டு வீச்சு விமானங்களின் பயங்கர ஓசை கேட்கத் தொடங்கியது ஒரு விமானம் எங்களை நோக்கி தலை கீழாக விரைந்து வருவதைக் கண்டேன். உடனே என் மகளை இழுத்துக் கொண்டு வயலில் இருந்த ஒரு குழிக்குள் விழுந்து இருவரும் முகம்குப்புற படுத்துக்கொண்டோம்

விமானம் அந்த இடத்தை பலமுறை வட்டமிட்டபடி குண்டுகளைப் பொழிந்து தள்ளிவிட்டு கடல்பக்கம் சென்றுவிட்டது விமானத்தின் சத்தம் ஓய்ந்தபின் நாங்கள் பதுங்கிய இடத்திலிருந்து வெளியே வந்தோம். என் மகள் தன் சூட்கேசை அப்படியே வயலில் போட்டு விட்டுத்தான் பதுங்கு குழிக்குள் வந்தவள். அதை நாங்கள் மீண்டும் போய் பார்த்த பொழுது அங்கு சூட்கேஸ் பல துப்பாக்கி ரவைகளால் துளைக்கப் பட்டிருந்தது. வெற்றுத் தோட்டாக்கள் பக்கத்தில் சிதறிக் கிடந்தன.

அந்த விமானம் எங்களைக் குறிநோக்கி சுட்டிருக்கிறது என்பது இப்பொழுது புலனாகிறது □□

தமிழில்: ஏ. ஆர். தியாகராஜா

www.tamilarangam.net



இளம்பச்சை வர்ணம் பூசப்பட்ட அந்தக் கூடத்து சுவர்களில்
இலக்கிய சிந்தனை விருதில் இருந்து சாகித்ய அகாதமி, சோவியத்
லேண்ட் பரிசு உட்பட அவர் பெற்ற பல விருதுகள் மாட்டப்பட்டிருக்
கின்றன. அவற்றின் நடுவே ஒரே ஒரு படம் — பாரதியாருடையது-
மட்டும் மாட்டப்பட்டிருக்கிறது. ராஜம் கிருஷ்ணன் என்ற எழுத்தாளரின்
ஆளுமையையும், லட்சியங்களையும் சொல்வதற்கு இவை மட்டுமே
போதுமானது. என்றாலும் அவர் சரளமாக, கலகலப்பாக. எதிராளி
யின் கருத்திற்கு மதிப்பு கொடுக்கும் அதேநேரத்தில் தன் கருத்தை
வெளிப்படுத்துவதில் உறுதியாக பேசுகிறார் சுமார் நான்கு மணி
நேரம் காப்பி எடிட்டர் மாலனுடன் அவர் பேசியதில் இருந்து சில
பகுதிகள்:

# தேடல் இருப்பதால் எழுதுகின்றேன்.

ராஜம் கிருஷ்ணன்

கே: நீங்கள் எழுத ஆரம்பித்த காலத்தில்
பெண் எழுத்தாளராக இருந்ததற்கும்
இன்று பெண் எழுத்தாளராக இருப்
பதற்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது
என்று கருதுகிறீர்களா?

ப: இருக்கு. அப்போ எந்தவிதமான வசதியோ, சூழ்நிலையோ எதுவும்
கிடையாது. முறையான படிப்பு கிடையாது. நான் எழுத ஆரம்பித்து
எட்டு வருஷம். ஒன்பது வருஷம் எதுவும் அச்சில் வந்ததில்லை ஒவ்
வொரு மாதமும் கதை திரும்பி வந்து கொண்டே இருக்கும். அந்தக்
காலத்தில் பெண்கள் எழுதுவதே கஷ்டமான காரியம். பத்திரிகை
ஆசிரியர்களிடம் ஆண் பெண் என்ற பாரபட்சம் இருக்கிறதோ என்று
நினைத்துக் கொண்டு நான் ஆண் பெயரில்கூட எழுத முயற்சிபண்ணி
யிருக்கிறேன். அதுவும் கலைமகளுக்கே. அந்தக் கதையும் பிரசுரமாக
வில்லை என்பது வேறு விஷயம். இப்போது நிறையப்பேர் எழுதுவதற்கு
சூழ்நிலை நல்லா இருக்கு. ஊக்குவிப்பு இருக்கு. எல்லோருக்கும் படிப்பு
எல்லாத்துக்கும் வாய்ப்பு இருக்கு. ஆனால், எல்லா துறையிலும் இருக்
கிற மாதிரி இதிலேயும் ஒரு கிளாமர் இருப்பதால் அதிலேயே பலர்
மயங்கிப் போயிடுற மாதிரி எனக்குத் தோன்றுகிறது.

கே: பெண் எழுத்தாளர்கள் பாலுணர்
வைக் கொச்சைப்படுத்தி எழுதுகிறார்
கள் என்ற குற்றச்சாட்டுப்பற்றி என்ன
கூறுகிறீர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ப: ஆண் எழுத்தாளர்களோட ஒப்பிட்டா அவங்க ஒன்னுமே எழுதலை. அது ரொம்பக் குறைச்சல். ஆனால், அதற்காக அவர்களை ரொம்ப அதிகமாகப் பல இடங்களில் தாக்கிப் பேசுகிறார்கள். சௌந்தர்ய லஹரியில் இருந்து எல்லாத்திலேயுமே பெண்களுடைய அங்கங்களை வர்ணித்திருக்கிறார்கள். லலிதா சஹஸ்ரநாமத்தில் கூட பச்சையாக இருக்கும். அர்த்தத்தை தெரிஞ்சுண்டு சொன்னோம்னா வெட்கமா இருக்கும். இதெல்லாம் ஆண்களுடைய நோக்கத்தில பண்ணினாங்க. ஆனால், பெண் தன்னுடைய உரிமையை நிலைநாட்டிக்கிற மாதிரி எழுதினால்கூட ''கூ. கூ'' னு சத்தம் போடறது சரியா?

கே: ஆண்களெல்லாம் பெண்களைக் கொடுமைப் படுத்துவதாகவும் பெண் எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்.

ப: கொடுமைதான் படுத்தறாங்க. அந்தக்காலத்தில 12, 13 வயசில கல்யாணம் பண்ணிட்டு உடனேயே சாந்தி முகூர்த்தம் வைச்சிருவாங்க. மறுநாள் காலையில அந்தப் பொண்ணு படற கஷ்டத்தை மனசில நினைச்சு பாக்கணும். இதெல்லாம் இந்த ஜெனரேசனுக்குத் தெரியமா? எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத நிலையில் ஆக்ரமிப்பை பெண்கள் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்வது நீதியாகவும், நியாயமாகவும் தர்மமாகவும் இல்லை. பெண்கள் கஷ்டப்பட்டிருக்காங்க பல தலைமுறைகளாக. இன்னிக்கும் அது ஓயலை. எட்டு வயசு பத்து வயசுப் பொண்ணையெல்லாம் கற்பழிக்கிறாங்க. கல்யாணம்கறபேர்ல கற்பழிப்புகள்தான் நடக்கிறது நிறைய. இதையெல்லாம் நாம எழுதினா ஆண்கள் கொடுமைப்படுத்தறாங்கன்னு எழுதறோம்னு சொல்றதுக்கும், எழுதறதுக்கும் ஆண்கள் இருக்காங்க.

கே: ஆனால் அப்படிப்பட்ட ஆண்கள் மிகவும் குறைவு இல்லையா?

ப: இல்லை, இல்லை, இப்போது கொடுமைகள் வேறுவிதமாக உருவெடுத்திருக்கு.

கே: தமிழ் இலக்கியத்தில் வலுவான பெண் பாத்திரங்களைப் படைத்தவர்கள் அநேகமாக ஆண்களாக — ஜானகிராமன், ஜெயகாந்தன், கடைசியாய் இப்போ பாலகுமாரன் — இருந்திருக்கிறார்கள். எந்த ஒரு பெண் எழுத்தாளரிடமிருந்தும் ஏன் இப்படிப்பட்ட பாத்திரங்கள் உருவாகவில்லை?

ப: என்னுடைய பாத்திரங்கள் பற்றிக்கேளுங்க. அதைப்பற்றிதான் நான் சொல்லணுமே தவிர...

www.tamilarangam.net



கே: எழுத்தாளர்கள் என்ற முறையில் இல்லவிட்டாலும் ஒரு பெண் என்ற முறையில் இதைக் குறித்து அக்கறைப் படவில்லையா?

ப: பார்க்கிறவர்களுடைய பார்வை என்று ஒன்றிருக்கிறது. ஜானகிராமனைச் சொல்லிவிட்டு இன்னும் நான் அவஸ்தைப்படுக்கொண்டிருக்கிறேன். போகிற இடங்களில் எல்லாம் அதையே சொல்லித் திட்டிட்டு இருக்காங்க. ஜானகிராமன் இறந்த பிறகும் அவருடைய ஆவி என்னையே சுத்திட்டிருக்கு. விடுதலையை செக்ஸ்மூலமாதான் அடையணும்னு ஜானகிராமன் சொல்றார். பெண் விடுதலைக்கு அவரைவிட பாடுபட்டவங்க யாரும் கிடையாதுன்னு கனகசபாபதி சொல்றாரு. அவங்கள்லாம் செக்ஸ்னால விடுதலைன்னு எஸ்டாபிளிஷ் பண்ணாங்க. அவங்க பார்வை அது. பெண்கள் யாரும் அப்படி பார்க்கலை. அவங்களோட பார்வையை நீங்கள்லாம் அக்செப்ட் பண்றீங்க. பெரிசு பண்றீங்க. ஏன்னா, பெண் என்பது செக்ஸ்தான்னு நீங்களும் அக்செப்ட் பண்ணிக்கிறீங்க. அதனால பெரிய பாத்திரம்னு சொல்றீங்க. பட் ஐ ஆம் நாட் அக்செப்டிங்.

கே: கோதைநாயகி அம்மாளில் இருந்து திலகவதி வரைக்கும் பெண் எழுத்தாளர்கள் பலர் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும் ஏன் புதுமைப்பித்தன் மாதிரி ஒரு எழுத்தாளர் அவர்களிடையே உருவாகவில்லை?

ப: எப்படிங்க முடியும்? கோதைநாயகியில் இருந்து திலகவதி வரை ஒரே சேணத்தில்தான் பூட்டப்பட்டிருக்காங்க- ஒரே அபிப்பிராயத்தில்தான் நிறையபேர் எழுதுகிறார்கள். ஆனால் கடைசிவரை வரமுடியாம போயிடறது. ரெகக்னிஷன் வந்ததும் திசைமாறிப் போயிடறாங்களோன்னு தோன்றது.

கே: இன்றைய பெண் உங்களுக்குக் கவலை தருகிறாளா?

ப: ஆம். ஐ ஆம் வொர்ரீட். எங்ககாலத்தில் எங்களுக்கு வாய்ப்பே இல்லை! இப்ப இவங்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கு. ஆனா, அவங்க அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கிறதே இல்லை.

கே: என்ன காரணம்?

ப: அவர்கள் திசைதிருப்பப்படுகிறார்கள். அவர்கள் வெறும் செக்ஸிம்பல் தான் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் இருக்கிறது என்பதை எப்படி சொல்றதுன்னே தெரியலை. எப்படிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போனாலும் அதிலே கொண்டு போய் முடிச்சிடறாங்க. அந்தக்கதைகளைப் படித்து விட்டுத்தான் அந்த கண்ணோட்டத்தில்தான் எழுதறாள். பெண் தனிப்பட்ட கருத்தை எடுத்துச் சொல்ற அளவுக்கு அவங்க இன்னும் முதிர்ச்சி அடையலை ஜனங்களுடைய மைண்ட் சேஞ்ச் ஆகலே டிரெய்ன், பஸ்சில் பேசும்போதெல்லாம் நிறைய பார்க்கிறேன். புடவை, சம்பளம், படிப்புன்னு பேச்சு. அன்னிக்கு எங்களுக்கு இந்த மாதிரி வாழ்க்கைப் பிரசினை இல்லை. என்னதான் இருந்தாலும் கல்யாணமாகி இருந்தது. பாதுகாப்பு இருந்தது. இன்னிக்கு அன்றன்றைய பாடே பிரசினையாக இருக்கிறதே!

கே: ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் அவ்வளவு அவசியமா?

ப: கல்யாணம் இல்லாம இருக்கறதுங்கிறது தேவையில்லை. ஆனா, கல்யாணம்கறது பெண்களோட எமோஷனல், நேச்சுரல் தலைமைகளுக்கு இடம் கொடுக்கணும். மாலை மாத்திக்கிற அன்னிக்கே மாத்திரை மாலையை மறக்காதேன்னு டி.வி.யில விளம்பரம் வருகிறது. கலியாணத்தோட புனிதத்தையே இது குலைக்கிறது. அதன் பின்னுள்ள சைக்காலஜியையே இது குதறுகிறது.

கே: உங்களுடைய மண்ணகத்து பூந்துளிகள் என்ற நாவலில் சொத்துரிமை, மணவிலக்கு உரிமை, பொருளாதார சுதந்திரம் இதெல்லாம் இருக்கிற ஒரு சமூகத்தில்தான் பெண் சிசுக்கொலையும் அதிகமாக இருக்கிறது என்று சொல்ல வருகிற நீங்கள், அதற்கு முன்னேற்றம்தான் காரணம் என்று நிறுவ முயற்சிக்கிறீர்கள். இது நவீனத்துவத்திற்கும், வளர்ச்சிக்கும் முரணானது இல்லையா?

ப: டெவலப்மெண்ட் என்ற பெயரில் இங்கு கன்ஸ்யூமரிசம்தான் எழுச்சி பெற்றிருக்கிறது. முன்பு தேவைகள், வாழ்க்கை சாதனங்கள் இவை எல்லாமே குறைவு, இப்போ மனித வாழ்க்கையை விட வாழ்க்கை சாதனங்களுக்குதான் மதிப்பு அதிகம்னு ஆயிடுத்து. இது ஆணை விட பெண் வாழ்க்கையைத்தான் அதிகம் பாதிக்கிறது.

கே: சோவியத் யூனியனில் பெண்கள் மீண்டும் சமையலறைக்குத் திரும்புவது பற்றி - கோ பேக் டு கிச்சன் - பேச ஆரம்பித்திருக்கிறார்கள். பலமுறை சோவியத் யூனியனுக்குச் சென்று வந்திருக்கிற நீங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ப: சோவியத் யூனியனுக்குச் சென்ற ஒவ்வொரு முறையும் அது மெல்ல மெல்ல மாற்றம் அடைந்து வந்திருப்பதை நான் கவனித்திருக்கிறேன். அங்கு பெண்கள் டிரக் ஓட்டுவது, பெரும் சுமையைத் தூக்கி வைப்பது போன்ற முரட்டுப் பணிகள் செய்வதை பார்த்திருக்கிறேன். என்னைக் கேட்டால் இந்த எக்ஸ்ட்ரீமும் தவறு. அந்த எக்ஸ்ட்ரீமும் தவறு. அந்த எக்ஸ்ட்ரீமும் தவறு ஆனால், சோஷலிசத்தில் பெண்கள் முன்னேற்றமே அடையவில்லை என்று சொல்ல முடியாது.

கே: தமிழ் படைப்புலகம் திருப்தி தருகிறதா?

ப: எப்படி திருப்தி தர முடியும்? நாம் ஒரு சந்தைக்கடை சமூகத்தில் இருக்கிறோம். வன்முறை நிறைந்த சமூகத்தில் வாழ்கிறோம். இதில் கிடைக்கிற அனுபவத்தின் வெளிப்பாடாகத்தான் இலக்கியம் இருக்க முடியும். என்னைப் பொறுத்தவரையில் நான் வெறும் செக்ஸை மட்டும் எழுதுவதில்லை. அதற்கு அப்பாலும் தேடிப் போகிறேன். கேள்வி கேட்கிறேன். அதனால் எழுதுகிறேன். நமக்கு ஒரு பார்வை இருக்கிறது. நம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் இருக்கிறது (We' ve got an expression about ourselves). அதுதான் இலக்கியமாக வருகிறது. □□ நன்றி: இந்தியா டுடே

## விழுது விடும் வரை

□

மந்தாரம் போட்டதால் மழை பெய்யும்
என்று இருந்தோம்
வந்த சிறு தூற்றலொடு வானம் வெளிறிப்போய்
எந்த அசுமாத்தமும் இல்லாது
மண் மணக்கும் அந்திவரை;
மீண்டும் அடி நிலத்தில் வைக்கேலா(து)
வெந்து விடும் பாதம்
வெளியில் நடந்தாலோ?

நேற்று வரை தோண்டி
நிலமடந்தை காட்டுகிற ஊற்றுக்கண் கொண்டே
உயிர் வாழ வைத்த பயிர்
நாற்றுப் பதியனிலும்
பாத்தியிலே பூ பிஞ்சாய்
காற்றோடு சாய்ஞ்சு நிமிர்ந்த கதிர்
முற்றாப் பாற்பருவம்
எல்லாம் ஏன் பஞ்சடைஞ்சாற் போலிருக்கு?

www.tamilarangam.net



கட்டுக் குலையாமல் காய் சுமந்த தென்னைகள்
ஏன் வட்டுதிர்ந்து
இன்றைக்கு வாழ்விழந்த பெண்களைப் போல்
மட்டை உரிந்து விழ வாடி மடிகிறது?
'நிலாவரை நீர்மட்டம் கீழிறங்கிப் போச்சாம்'
'பலாலி வரை பனையும் படத் தொடங்கி விட்டுதாம்'
என்ற கதைகள் அடிபடும்
என்றாலும்;
என்றும் உடம்பாலே குருதி மழை பொழிய
நின்றுழைப்போம்
ஈழத்தை நேசிக்கும், நாங்கள் எல்லாம்
அக்கரையில
எம்மை அடிமைப் படுத்த வந்தோர்
தக்காளிக் கும்பியாய்
தலை கால் தசை சிதறக்
கொத்த வைத்தார் காகம்
நம் குஞ்சுப் பரம்பரைகள்.

கத்துகிறார் வாய்கிழிய ஏதோ?
கருணை வெள்ளம் அத்தனையும்
தம்மிடமே ஊற்றெடுப்பதாய் அந்தோ!
'மழலைப் பட்டாளம் மடைப் பெடியள்'
என்றவரேன் அழாக்குறையாய் இத்தனை நாள்
ஏனாம் அலட்டுறார்?

மந்தாரம் போட்டால்
மழைவரும் என்றிரோம்
சொந்தக் கரத்தாலே சொர்க்க சுதந்திரத்தை
இந்தத் தமிழீழ மண்ணில்
மரமாக்க
வெந்து கரைவோம்
விழுது விடும் வரைக்கும்
சந்ததியாய்ச் செய்வோம் சமர்.

□

□

கல்வயல் வே. குமாரசாமி

www.tamilarangam.net



கூறைச் சேலைகள் "அ
பட்டு வேட்டிகள்
கோவில் குடைகள் ஜ
இன்னும்
உங்கள் எண்ணம் ந்
கவர்ந்த தா
புடவை வகைகளை
தெரிவு செய்ய ஸ்"

ஏ
ற்
ற
தோ
ர்

எழில் கூடம்

"அஜந்தாஸ்"
54, பெரியகடை
யாழ்ப்பாணம்
கிளை: 25. 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓவியம் என்றால் என்ன?

ஒரு ஓவியத்தினை விளங்கிக் கொள்வது எப்படி? இது பலரிடையே எழும் ஓவியம் பற்றிய ஒரு அடிப்படையான பிரச்சினை. ஓவியத்தினை மட்டுமல்லாது பொதுவாகக் கட்புலக் கலைவடிவங்களை (*Visual arts*) விளங்கிக் கொள்வதாயின் அவற்றினை உருவாக்கி நிற்கும் அடிப்படையான கட்புல அலகுகள் (*Visual Elements*) பற்றிய அறிவு இன்றியமையாததாகும். ஆறு அடிப்படையான கட்புல அலகுகள் உள, அவையாவன.

கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்

## ஓவியம் என்றால் என்ன?

ரேகை (*Line*)
உருவமைவு (*Form*)
வடிவம் (*Shape*)
வர்ணம் (*Colour*)
தன்மை (*Texture*)
வெளி (*Space*)

**ரேகை:**

ரேகை, ஓவியத்தில் பல்வேறு வகையினதாக அமையலாம். அது நேர்ரேகையாக இருக்கலாம் வளைந்த ரேகையாக இருக்கலாம். இப்படிப் பலவாறாக அமையலாம்.

ரேகைகள் தனித்தோ அல்லது ஒரு உருவத்தின் புறஎல்லைகளைக் குறிக்குமுகமாகவோ கையாளப்படலாம்.

**உருவமைவு:**

ஒரு பொருள் வெளியில் ஒரு குறித்த கனவளவை அடைக்க வல்லது. அதேவேளை இந்தக் கனவளவு வெவ்வேறான வடிவங்களைக் கொள்ளலாம். இந்த இரண்டு தன்மைகளையும் சுட்டி நிற்கும் பதம் தான் உருவமைவு.

உருவமைவு முப்பரிமாணமுடையது. ஆனால் ஓவியத்திலோ இம்முப்பரிமாணத் தன்மை ஒரு மாயை நிலையிலேயே காட்டப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> "ஒரு ஓவியத்தின் பிரதான விடயம் அல்லது குவிமையம் ஒரு இடத்தில் தான் அமையும்"

வெளியில் பாவிக்கப்படும் வர்ணமானது வடிவம் உருவமைவு ஆகிய இரண்டிலும் எதிர்த்தன்மையான (Controst) தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. இத்தாக்கத்தினை ஓவியத்தின் கருப்பொருளை முனைப் படையச் செய்யும் வகையில் பாவிப்பதிலே ஓவியத்தின் வெற்றி பெருமளவிற் தங்கி நிற்கிறது.

## ஓவியத் தொகுப்பு (Composition)

கட்புல அலகுகளின் எழுந்தமான தொகுப்பு ஓவியமாகி விடாது. அப்படியாயின் கட்புல அலகுகள் எதனடிப்படையில் ஓவியத்தில் கையாளப்படுகின்றன என்பதே எம்முள் எழும் அடுத்த கேள்வி.

கட்புல அலகுகள் நான்கு முக்கிய அழகியல் அடிப்படைகளுக்கு இயைய பயன்படுத்தப்படுகையில் ஓவியம் உருவாகிறது. ஆனால் இந்த அழகியல் அடிப்படைகளை ஓவியன் எப்பொழுதும் அறிவு பூர்வமாகத் தான் பிரயோகிக்கிறான் என்று நாம் முடிவு கட்டிவிட முடியாது. பல சந்தர்ப்பங்களில் ஓவியனின் ரசனை அடிப்படையில் அமையும் தேர்வு இவ்வழகியல் அடிப்படைகளுக்குத் தோதாகவே அமைகிறது.

உதாரணமாக ஒரு நிலக்காட்சியினைக் கருப்பொருளாகவுடைய ஓர் ஓவியத்தினை நோக்குவோம். அதில் காட்டப்படும் நிலப் பரப்பு, ஆகாயம், அண்மையாகக் காட்டப் படவேண்டிய மரங்கள், சேய்மையாகக் காட்டப்படவேண்டிய மரங்கள் இவற்றிற் கிடையேயான நிறவேறுபாடு, இவற்றிற் கிடையேயான அளவுகளில் ஏற்படும் வேறு பாடு போன்ற நுணுக்கங்கள் தக்க விகத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும்.

அதாவது இக்காட்சியில் பயன்படுத்தப் படும் வெவ்வேறு கட்புல அலகுகள் இந் நுணுக்கங்களைக் காட்டும் வகையில் பரிமாணப்படுத்தப்படல் வேண்டும் (Proportion) இதுவே முதலாவது விதி.

ஒரு ஓவியத்தின் பிரதான விடயம் அல்லது குவிமையம் ஒரு இடத்தில் தான் அமையும். ஆகவே ஓவியத்தின் ஏனைய பகுதிகள் இக்குவியமையத்தினை மேலும் முனைப்படைச் செய்யும் வகையிலேயே அமைய வேண்டும். அத்துடன் ஒரு பார்வையாளன் ஓவியத்தின் எந்த முனையில் இருந்து பார்க்கத் தொடங்கினாலும் அவனது கட்புலப் பயணம் இக்குவிமையத்தினை நோக்கி நகரும் வகையில் ஓவியம் அமைய வேண்டும். கட்புல அலகுகள் தக்க ஒருமைப் பாட்டுடன் (unity) பயன்படுத்தப்படுகையிலேயே இந்த விளைவு சாத்தியப்படுகிறது. இந்த ஒருமைப்பாடே இரண்டாவது அழகியல் அடிப்படை.

ஒவ்வொரு கட்புல அலகும் பல்வேறு பண்புகளில் ஒரு ஓவியத்தில் தோன்றும். உருவங்களை எடுத்துக் கொண்டால் அவை சிறியனவாகவோ பெரியனவாகவோ வெவ்வேறு வர்ணங்களை உடையனவாகவோ அமையலாம். ஒரே பண்புகளைக் கொண்ட கட்புல அலகுகள் ஓவியத்தின் ஒரு பக்கத்தில் தேங்கி விட்டால் ஓவியம் சீரானதாக அமையாது. உதாரணமாக பெரிய உருவங்களை எல்லாம் ஒருபுறமும் சிறியனவற்றை யெல்லாம் மறுபுறமும் அமைப்பின் ஓவியம் சீரினை இழந்து விடும்.

இது உருவத்திற்கு மட்டுமல்லாது எல்லாக் கட்புல அலகுகட்கும் மட்டுமல்லாது அவற்றின் தனித்தனிப் பண்புகளுக்கும் பொருந்தும். ஆகவே இவை தக்க சமநிலையில் (Balance) பயன்படுத்தப்பட வேண்டும். இது ஓவியத் தொகுப்பில் கையாளப்படும் மற்றுமொரு அழகியல் அடிப்படை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு ஓவியம் மீதான கட்புலப் பயணம் ஒரு சீரான பயணமாக அமைவது அவசியம். இக்கருத்தினை மிக எளிமைப்படுத்திக் கூறுவதாயின் மாறாத பண்புகளையுடைய ஒரு குறித்த உருவம் குறித்த இடைவெளி களில் ஒரு ஓவியத்தில் மீண்டும் மீண்டும் வருமாயின் அங்கே ஒரு சீரான கட்புலப் பயணம் இருக்கும் எனலாம். ஆனால் சாதாரணமாக கட்புல அலகுகள் இவ்வளவு எளிமையாக ஓவியத்தில் தோன்றுவதில்லை. ஆகவே வெவ்வேறான பண்புகளையுடைய கட்புல அலகுகளை தக்க லயம் (*Rhythm*) ஏற்படும் வகையில் கையாளுவது அவசிய மாகிறது. இதுவே எமது அடுத்த அழகியல் அடிப்படை.

மேலே கூறப்பட்ட அழகியல் அடிப் படைகள் எளிமையாகத் தோன்றினாலும் அவற்றின் சிக்கலான தன்மையினைப் பார்வையாளன் உணர்ந்து கொள்வது அவசியமாகிறது. ஒவ்வொரு கட்புல அலகும் பல்வேறு பண்புகளைக் கொண்டிருக்கும். ஒரு ஓவியத்தில் ஒரே பண்புகளைக் கொண்ட கட்புல அலகுகள்தான் பாவிக்கப்படும் என்று கூறுவதற்கில்லை.

ஆகஓவியத்தொகுப்பு என்பது பல்வேறு பட்ட பண்புகளையுடைய வெவ்வேறான கட்புல அலகுகளை அழகியல் அடிப்படை களுக்கு இயைய தொகுப்பதை அடிப்படை யாகக் கொண்ட செயற்பாடு எனலாம்

## ஓவியம் எதற்காக?

ஓவியம் படைப்பது ஒரு பொழுது போக் காகவும் ஓவியம் சேகரிப்பது ஒரு ஆடம்பர மாகவுமே இன்று பலரால் கருதப்படுகிறது.

ஆனால் மனிதன் குகைகளில் வாழ்ந்த நாள் முதல் இன்று வரை ஓவியம் மனித வாழ்வியலின் ஒரு பகுதியாக இருந்து வருவதனை ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டு கின்றன. அத்துடன் நில்லாது இவை மனிதனின் வாழ்க்கைச் செயற்பாடுகளை யும் வாழ்முறைகளையும் மட்டுமல்லாது அவனது நம்பிக்கைகள், வாழ்க்கைத் தத்து வம் பற்றியும் கூறவல்லன.

நமது சமகால வாழ்வில் ஓவியத்தின் தேவையென்ன என்பதே எமது கேள்வி இன்றைய ஓவியம் இன்றைய கலைஞனின் சுயவெளிப்பாடாகவே பெரும்பாலும் அமைகிறது அவனது உளவியல் அவனது வாழ்க்கைத்தத்துவம், அவனது அனுபவம், அவனது கற்பனை இப்படியாகப் பல்வேறு பரிமாணங்களை இவை வெளிப்படுத்துகின் றன.

ஓவியம் சமூகம் சார்ந்த ஒரு தேவை யாகக் கூட அமையலாம் கொள்கைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த, அரசியல் பிரச்சார மாக அல்லது சமூகம் மீதான ஒரு விமர் சனமாகக்கூட அமையலாம். இவையெல் லாம் ஓவியத்தின் தேவையினை நியாயப் படுத்துவதாக நாம் கொள்ளலாம்.

## படைப்புச்சாதனம்

பொதுவாகப் பாவிக்கப்படும் படைப் புச்சாதனங்களாவன; எண்ணை வர்ணம், நீர்வர்ணம், வர்ணக்கட்டி (*Chalk*) கித்தான் (*Canvas*), காகிதமட்டை, தூரிகை, கட்டிப் பலகைக்கத்தி

படைப்புச்சாதனங்களும் ஓவியத்தின் மொத்த வெளிப்பாட்டில் செல்வாக்குச் செலுத்தவல்லன. அத்துடன் படைப்புச் சாதனத்தைப் பொறுத்து ஓவியப்பாணியும் வேறுபடலாம். ஆகவே ஒரு ஓவியம் எதனால் படைக்கப்பட்டுள்ளது என்பத னையும் நாம் கருத்திலெடுக்க வேண்டும்.

## மேலைத்தேய ஓவியம்

ஓவியம் கலைஞனுக்குக் கலைஞன், நாட்டுக்கு நாடு எனப்பல்வேறு மட்டங் களிலும் அதன் வெவ்வேறு பண்புகளில் வேறுபட்டு நிற்கிறது. இருப்பினும் ஓவியத் தினை மேலைத்தேய ஓவியம் கீழைத்தேய ஓவியம் எனப் பருமட்டாக வகுக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"தற்காலத்தில் ஓவியம் என்று கருதுகையில் பலரது மனதில் அது நவீன ஓவியத்தையே ஞாபகப்படுத்தும்"

இத்தப் பகுப்புக்கூட மரபு வழி ஓவியங்களுக்கே சிறப்பாகப் பொருந்தும்.

குடியேற்ற ஆட்சியின் விளைவாகவும் வளர்ந்து வரும் சர்வதேச பரிவர்த்தனையின் விளைவாகவும் இன்றைய ஓவியம் ஒரு சர்வதேசப் பொதுமையை நோக்கி நகர்ந்து செல்கிறது.

மேலைத்தேய ஓவியம் முக்கியமாக இரண்டு பாரம்பரியங்களுக்கூடாக வளர்ந்து வந்துள்ளது. ஒன்று பிரித்தானிய சிந்தனையோட்டம் வாயிலாக வந்த விக்ரோறியாப் பாணி ஓவியங்கள். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தின் முற்பகுதிகளில் ஆசியாவில் செல்வாக்குப் பெற்றிருந்த இப்பாணியின் வழித்தோன்றல்களாக ராஜாரவிவர்மா, A. C. G. S அமரசேகரா போன்றோரைக் கூறலாம். இவர்கள் தத்ரூபப்பாணியையே கடைப்பிடித்தார்கள்.

மேலைத்தேய ஓவியத்தின் இன்னொரு பாரம்பரியம் பிரெஞ்சுக் கருத்தோட்டத்தின் வழி வளர்ந்து வந்தது. இதன் வழியாகவே நவீன ஓவியம் வந்தது.

நவீன ஓவியம்

தற்காலத்தில் ஓவியம் என்று கருதுகையில் பலரது மனத்தில் அது நவீன ஓவியத்தையே ஞாபகப்படுத்தும். இன்று நவீன ஓவியமும். ஓவியமும் ஒன்றையொன்று பிரதியீடு செய்யக்கூடிய பதங்களைப் போலவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே நவீன ஓவியத்தினை ஏனைய மேலைத்தேய ஓவியங்களிலிருந்து பிரித்தறிய வேண்டிய ஒரு தேவை ஏற்படுகிறது.

நவீன ஓவியக் கலை இயக்கமானது கலைஞன் தான் வழக்கமுறையாகப் பெறும் அனுபவத்தை அவனது யதார்த்த அல்லது கற்பனையால் உணரப்பட்ட கட்புல அலகுகள் வாயிலாக அழகியல் அடிப்படைகளுக்கு இயைய ஸ்தூலமான எண்ணக் குறியீடாகச் சேர்த்தல் மூலம் ஒரு ஒழுங்கமைப்புடன் கூடிய - ஒரு நிச்சயத்தன்மையுள்ள - முழுமையான வடிவமாகப் பிரதிபலிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

நவீன ஓவிய இயக்கமானது பல இசங்களை (Isms) அடக்கி நிற்கிறது. உலகில் அறிவியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்படுகையில் அது கலை இலக்கியங்களையும் பாதிக்கவே செய்கிறது. இந்தப் பாதிப்பு கணிசமானதாக அமையும் பொழுது அது ஒத்த போக்குடைய கலை இலக்கிய வாதிகளை இணைத்து சில கோட்பாடுகளை முன்வைத்துச் செயல்படத் தூண்டுகிறது. இவர்களின் வாயிலாகவே இந்த இசங்கள் தோன்றுகின்றன.

இவை பற்றிய ஆய்வு எமது நோக்கத்திற்கு அப்பாற்பட்டது இருப்பினும் இவை முழுவதையும் இரண்டு பிரதான செல்நெறிகளுக்குள் அடக்கலாம்.

அதில் ஒன்று வெளிப்பாட்டுவாதம் (Expressionism), இங்கே ஓவியம் ஒரு ஆழமான உணர்வுத் தளத்தினைக் கொண்டிருக்கும். இத்தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் ஓவியன் கட்புல அலகுகளில் விகாரத்தை ஏற்றுகிறான்.

மற்றையது அரூபவாதம் (Abstractionism) இந்தப் பதம் பல சந்தர்ப்பங்களில் எழுந்தமானத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச் செல்நெறியில் ஈற்றாக வரும் ஓவியம் அரூப ஓவியம் (Abstract Art) எனப்படுகிறது. அரூப ஓவியம் புறத்தூண்டல்கள் இல்லாமலேயே உருவாக்கப்படுகிறது. எப்படி அரூப இசையானது கேட்போரில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிற

www.tamilarangam.net



ஒரு ஓவியம் மீதான கட்புலப் பயணம் ஒரு சீரான பயணமாக அமைவது அவசியம். இக்கருத்தினை மிக எளிமைப்படுத்திக் கூறுவதாயின் மாறாத பண்புகளையுடைய ஒரு குறித்த உருவம் குறித்த இடைவெளிகளில் ஒரு ஓவியத்தில் மீண்டும் மீண்டும் வருமாயின் அங்கே ஒரு சீரான கட்புலப் பயணம் இருக்கும் எனலாம். ஆனால் சாதாரணமாக கட்புல அலகுகள் இவ்வளவு எளிமையாக ஓவியத்தில் தோன்றுவதில்லை. ஆகவே வெவ்வேறான பண்புகளையுடைய கட்புல அலகுகளை தக்க லயம் (*Rhythm*) ஏற்படும் வகையில் கையாளுவது அவசியமாகிறது. இதுவே எமது அடுத்த அழகியல் அடிப்படை.

மேலே கூறப்பட்ட அழகியல் அடிப்படைகள் எளிமையாகத் தோன்றினாலும் அவற்றின் சிக்கலான தன்மையினைப் பார்வையாளன் உணர்ந்து கொள்வது அவசியமாகிறது. ஒவ்வொரு கட்புல அலகும் பல்வேறு பண்புகளைக் கொண்டிருக்கும். ஒரு ஓவியத்தில் ஒரே பண்புகளைக் கொண்ட கட்புல அலகுகள்தான் பாவிக்கப்படும் என்று கூறுவதற்கில்லை.

ஆகஓவியத்தொகுப்பு என்பது பல்வேறுபட்ட பண்புகளையுடைய வெவ்வேறான கட்புல அலகுகளை அழகியல் அடிப்படைகளுக்கு இயைய தொகுப்பதை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடு எனலாம்

ஓவியம் எதற்காக?

ஓவியம் படைப்பது ஒரு பொழுது போக்காகவும் ஓவியம் சேகரிப்பது ஒரு ஆடம்பரமாகவுமே இன்று பலரால் கருதப்படுகிறது.

ஆனால் மனிதன் குகைகளில் வாழ்ந்த நாள் முதல் இன்று வரை ஓவியம் மனித வாழ்வியலின் ஒரு பகுதியாக இருந்து வருவதனை ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன் நில்லாது இவை மனிதனின் வாழ்க்கைச் செயற்பாடுகளையும் வாழ்முறைகளையும் மட்டுமல்லாது அவனது நம்பிக்கைகள், வாழ்க்கைத் தத்துவம் பற்றியும் கூறவல்லன.

நமது சமகால வாழ்வில் ஓவியத்தின் தேவையென்ன என்பதே எமது கேள்வி இன்றைய ஓவியம் இன்றைய கலைஞனின் சுயவெளிப்பாடாகவே பெரும்பாலும் அமைகிறது அவனது உளவியல் அவனது வாழ்க்கைத்தத்துவம், அவனது அனுபவம், அவனது கற்பனை இப்படியாகப் பல்வேறு பரிமாணங்களை இவை வெளிப்படுத்துகின்றன.

ஓவியம் சமூகம் சார்ந்த ஒரு தேவையாகக் கூட அமையலாம் கொள்கைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த, அரசியல் பிரச்சாரமாக அல்லது சமூகம் மீதான ஒரு விமர்சனமாகக்கூட அமையலாம். இவையெல்லாம் ஓவியத்தின் தேவையினை நியாயப்படுத்துவதாக நாம் கொள்ளலாம்.

படைப்புச்சாதனம்

பொதுவாகப் பாவிக்கப்படும் படைப்புச்சாதனங்களாவன; எண்ணெய் வர்ணம், நீர்வர்ணம், வர்ணக்கட்டி (*Chalk*) கித்தான் (*Canvas*), காகிதமட்டை, தூரிகை, கட்டிப் பலகைக்கத்தி

படைப்புச்சாதனங்களும் ஓவியத்தின் மொத்த வெளிப்பாட்டில் செல்வாக்குச் செலுத்தவல்லன. அத்துடன் படைப்புச் சாதனத்தைப் பொறுத்து ஓவியப்பாணியும் வேறுபடலாம். ஆகவே ஒரு ஓவியம் எதனால் படைக்கப்பட்டுள்ளது என்பதனையும் நாம் கருத்திலெடுக்க வேண்டும்.

மேலைத்தேய ஓவியம்

ஓவியம் கலைஞனுக்குக் கலைஞன், நாட்டுக்கு நாடு எனப்பல்வேறு மட்டங்களிலும் அதன் வெவ்வேறு பண்புகளில் வேறுபட்டு நிற்கிறது. இருப்பினும் ஓவியத்தினை மேலைத்தேய ஓவியம் கீழைத்தேய ஓவியம் எனப் பருமட்டாக வகுக்கலாம்.

www.tamilarangam.net



"தற்காலத்தில் ஓவியம் என்று கருதுகையில் பலரது மனதில் அது நவீன ஓவியத்தையே ஞாபகப்படுத்தும்"

இந்தப் பகுப்புக்கூட மரபு வழி ஓவியங்களுக்கே சிறப்பாகப் பொருந்தும்.

குடியேற்ற ஆட்சியின் விளைவாகவும் வளர்ந்து வரும் சர்வதேச பரிவர்த்தனையின் விளைவாகவும் இன்றைய ஓவியம் ஒரு சர்வதேசப் பொதுமையை நோக்கி நகர்ந்து செல்கிறது.

மேலைத்தேய ஓவியம் முக்கியமாக இரண்டு பாரம்பரியங்களுக்கூடாக வளர்ந்து வந்துள்ளது. ஒன்று பிரித்தானிய சிந்தனையோட்டம் வாயிலாக வந்த விக்ரோறியாப் பாணி ஓவியங்கள். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தின் முற்பகுதிகளில் ஆசியாவில் செல்வாக்குப் பெற்றிருந்த இப்பாணியின் வழித்தோன்றல்களாக ராஜாரவிவர்மா, A. C. G. S அமரசேகரா போன்றோரைக் கூறலாம். இவர்கள் தத்ரூபப்பாணியையே கடைப்பிடித்தார்கள்.

மேலைத்தேய ஓவியத்தின் இன்னொரு பாரம்பரியம் பிரெஞ்சுக் கருத்தோட்டத்தின் வழி வளர்ந்து வந்தது. இதன் வழியாகவே நவீன ஓவியம் வந்தது.

**நவீன ஓவியம்**

தற்காலத்தில் ஓவியம் என்று கருதுகையில் பலரது மனத்தில் அது நவீன ஓவியத்தையே ஞாபகப்படுத்தும். இன்று நவீன ஓவியமும். ஓவியமும் ஒன்றையொன்று பிரதியீடு செய்யக்கூடிய பதங்களைப் போலவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே நவீன ஓவியத்தினை ஏனைய மேலைத்தேய ஓவியங்களிலிருந்து பிரித்தறிய வேண்டிய ஒரு தேவை ஏற்படுகிறது.

நவீன ஓவியக் கலை இயக்கமானது கலைஞன் தான் வழக்கமுறையாகப் பெறும் அனுபவத்தை அவனது யதார்த்த அல்லது கற்பனையால் உணரப்பட்ட கட்புல அலகுகள் வாயிலாக அழகியல் அடிப்படைகளுக்கு இயைய ஸ்தூலமான எண்ணக் குறியீடாகச் சேர்த்தல் மூலம் ஒரு ஒழுங்கமைப்புடன் கூடிய - ஒரு நிச்சயத்தன்மையுள்ள - முழுமையான வடிவமாகப் பிரதிபலிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

நவீன ஓவிய இயக்கமானது பல இசங்களை (Isms) அடக்கி நிற்கிறது. உலகில் அறிவியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்படுகையில் அது கலை இலக்கியங்களையும் பாதிக்கவே செய்கிறது. இந்தப் பாதிப்பு கணிசமானதாக அமையும் பொழுது அது ஒத்த போக்குடைய கலை இலக்கிய வாதிகளை இணைத்து சில கோட்பாடுகளை முன்வைத்துச் செயல்படத் தூண்டுகிறது. இவர்களின் வாயிலாகவே இந்த இசங்கள் தோன்றுகின்றன.

இவை பற்றிய ஆய்வு எமது நோக்கத்திற்கு அப்பாற்பட்டது. இருப்பினும் இவை முழுவதையும் இரண்டு பிரதான செல்நெறிகளுக்குள் அடக்கலாம்.

அதில் ஒன்று வெளிப்பாட்டுவாதம் (Expressionism), இங்கே ஓவியம் ஒரு ஆழமான உணர்வுத் தாக்கினைக் கொண்டிருக்கும். இத்தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் ஓவியன் கட்புல அலகுகளில் விகாரத்தை ஏற்றுகிறான்.

மற்றையது அரூபவாதம் (Abstractionism) இந்தப் பதம் பல சந்தர்ப்பங்களில் எழுந்தமானத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச் செல்நெறியில் ஈற்றாக வரும் ஓவியம் அரூப ஓவியம் (Abstract Art) எனப்படுகிறது. அரூப ஓவியம் புறத்தூண்டல்கள் இல்லாமலேயே உருவாக்கப்படுகிறது. எப்படி அரூப இசையானது கேட்போரில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தோ அதேபோல அருப ஓவியனும் தனது நிறங்கள், கோடுகள், எளிய உருவங்கள் மூலம் பார்வையாளனில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முயல்கிறான்.

ஆனால் *Abstractionism* என்பதோ *Abstraction* என்ற செயற்பாட்டினைக் குறித்து நிற்கிறது இச் செல்நெறியில் ஓவியன் இயற்கையில் உள்ள பொருட்களை எடுத்து அவற்றில் அவசியமற்றவற்றை நீக்கிவிட்டு அதனைச் சாரமாக, பொழிப்பாகத் தருகிறான். இதனைப் பொழிப்புவாதம் என்பதே சாலச் சிறந்தது.

இந்த இரண்டு செல்நெறிகளும் தனித் தனியே ஆராயப்பட்டாலும். இவை இணைந்தே ஓவியத்தில் வெளிப்படும். இந்த இரண்டு செல்நெறிகளின் அறிமுகமே 20ஆம் நூற்றாண்டு ஓவியன் ஓவிய உலகிற்குச் செய்த முக்கியமான பங்களிப்பு.

இவை இரண்டும் அருப வெளிப்பாட்டு வாதத்தில் ஒன்றிணைகின்றன. இங்கே முற்றான அருபத்தன்மையும் ஓவியனின் முழுமையான செல்வாக்கும் வெளிப்படுகின்றன. இவ்வகை ஓவியங்கள் ஏறக்குறைய ஓவியனின் கையெழுத்தைப் போன்றது.

இந்த ஓவியப்பாணியின் வருகையுடன் ஓவிய உலகில் கருத்துக்கள் மாறத் தொடங்கின ஓவியத்தில் ஓவியனின் செல்வாக்கினைக் குறைக்க வேண்டிய தேவையினை இவை உணர்த்தின.

இதன் பின் தெளிவாக வரையறுக்கப் படாத சில இசங்கள் தோன்றின. இவ் வரிசையில் வந்த புதியதத்ருபவாதத்துடன் (*Neo Realism*) இசங்கள் படிப்படியாகச் செல்வாக்கு இழந்தன.

60 களின் நடுப்பகுதிகளிலேயே அருப ஓவியம் மேற்கில் செல்வாக்கினை இழக்கத் தொடங்கியது. ஓவியத்தில் உருவத்தின் தேவையும் கருத்துப்பரிமாற்றத்தின் அவசியமும் இப்பொழுது பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. □□

**19 - 04 - 1992**

**"தனக்கென வாழாத்**
**தியாகத்தாய்"**

# அன்னை பூபதி

**நாலாமாண்டு நினைவு......**

"மட்டுநகரினில் மாமாங்க வீதியில்
மாகரசி கிடந்தாள் - ஒரு
மாதம் கிடந்தபின் மக்களுக்காகவே
மண்ணை அவள் துறந்தாள்"





## "தயா"வின் "காலமும் கோலமும்" கருத்தோவியங்கள் தொகுப்பு பற்றி.........

- சதா -

இன்று பரவலாக கவனத்திற்பட்டு வரும் ஓவியம் பற்றிய பிரக்ஞை மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்க வேண்டியதுமாகும். ஓவிய இரசனை, ஓவியம் பற்றிய தேடல், புதிய ஓவியர்கள் உருவாக்குதல் இவற்றினூடாக புதிய படைப்புக்களின் கண்காட்சிகளும், நூல்களும் வெளிப்படுதல் என இது பரிணமிக்கின்றது.

இந்தப் பின்னணியில் இன்று நம்முடன் வாழ்ந்து கொண்டு படைப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஓவியர் தயாவும், அவரது காலமும் கோலமும், கார்ட்டூன் சித்திரங்களின் தொகுப்பு நூலின் வரவும் மகிழ்ச்சியைத் தருகின்றன.

இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் ஓவியங்களை வரைய ஆரம்பித்தவர் ஓவியர் தயா அவர்கள். சிறு வயதில் இருந்தே ஓவியங்களைக் கூர்மையாகக் கவனிக்கும் பழக்கமுண்டு. ஆயினும் இந்திய இராணுவம் இங்கிருந்த போது ஏற்பட்ட "சூழலின் இறுக்கம்" தன்னைப் படைப்புத் தல் செய்யத் தூண்டியது என்று கூறுகின்றார்.

ஆரம்பத்தில் தத்ருப ஓவியங்களையே வரைந்திருக்கின்றார். அவற்றில் நிறச்சேர்க்கை, தூரிகையின் நுணுக்கமான பயன், கலை உணர்வு என்பன தயாவை அப்போதே நம்பிக்கைக்குரியவராக அடையாளம் காட்டிற்று.

நூல்களுக்கான முகப்பு அட்டைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கான ஓவியங்களையும் தத்ருபப்பண்பிலேயே வரைந்திருக்கின்றார். தேடல், படைப்புத்தல் காரணமாகத் தத்ருப ஓவிய வரைதலில் இருந்து நவீன பாணிக்குத் தாவியுள்ளார்.

ஆரம்பத்தில் வரைந்தவை தவிர இப்பொழுதுள்ளவை நவீனத்துவமான குறியீட்டுப் பண்புகளைக் கொண்டுள்ளனவாகக் காணப்படுகின்றன. நீர் வண்ணத்தைக் கொண்டு தீட்டப்பட்ட ஓவியங்களின் வர்ண அமைவு, பார்வையாளனில் உயிர்ப்புடன் ஊறுகின்றது. பார்வையாளன் ஓவியத்துடன் இணைந்து கொள்ளுகிறான். இங்கே கலைஞனும் அவனது படைப்பும் பார்வையாளனில் நட்புடன் உறவடைகின்றன.

www.tamilarangam.net



''கருத்தோவியங்கள் என்பவை கணநேரச் சிரிப்புக்கு மட்டும் உரியவை அல்ல. கணநேரத்தில் கவனத்தை ஈர்த்து கருத்துக்கு விருந்தாகும்.''

''காலமும் கோலமும்'' பதிப்பாளர்






போர்க்கால (சமகால) நிகழ்வுகளையும், உணர்வூட்டலையும் பிரதானமாகக் காட்சிப்படுத்தும் தயாவின் ஓவியங்கள் காலப் பிரக்ஞை கொண்ட கலைஞனாகத் தயாவை இனம்காட்டுகின்றன. ஒரு கலைஞனுக்குரிய பண்பு இங்கேதான் அமைகின்றது.

தயா தன் படைப்புத் தொழிலின் மேலதிகத் தகுதியாகத் தன்னை ஒரு 'கார்ட்டூனிஸ்ட்' டாகவும் அடையாளப்படுத்தியுள்ளார்.

இன்றைய உலகில் முக்கியமாக, அரசியலை விமர்சிக்கும் நேரடித்திறன் கார்ட்டூனுக்கே உண்டு. விகடத்துடன் விமர்சிப்பை வெளிப்படுத்தும் கார்ட்டூன் சித்திரத்தின் வளர்ச்சி எம்மைப் பொறுத்தவரையில் விட்டம் பெருக்காத நிலையிலேயே உள்ளது. எங்களுடைய கார்ட்டூன் உலகில் சுந்தர் (சிரித்திரன்) என்ற வகையில் மட்டுமே அநேகமாக அறியப்பட்டுள்ளது. சூரி என்பவரும் கார்ட்டூன் உலகில் அறிமுகமாகி இருந்தார். ஆனால் பின்னர் அவருடைய கார்ட்டூன்களைக் காணமுடியவில்லை. எனவே எங்களுடைய கார்ட்டூன் உலகை விசாலிக்கத் தயாவின் வருகை நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. இலேசான கோடுகளின் மூலம் கருத்தையும் விகடத்தையும் சேர்த்துத் தருவதில் தயாவின் முனைப்பு முதன்மை பெறுகின்றது.

ஈழநாதம் பத்திரிகையின் முதலாவது இதழில் 'அமைதிப் ப(r)டை போகிறது' - இலங்கை, இந்திய ஒப்பந்தம் மரணித்து அதை இந்திய இராணுவம் காவிக்கொண்டு செல்லுதல் சித்திரத்துடன் கார்ட்டூன் வரைதலை வெளிப்படுத்தத் தொடங்கினார்.


இலங்கையின் இனப்பிரச்சினை, சிங்கள அரசின் இரட்டைத்தன பொய்மைநிலை. (அமைதியைப்பற்றிய பேச்சுக்களும் யுத்த நடவடிக்கைகளும்) பௌத்தப் பேரினவாதம்' இந்திய அரசின் தமிழீழ மீதான ஆதிக்க நடவடிக்கைகள் என இவர் வரைந்த கார்ட்டூன்கள் கவனிப்புக் கொண்டவை. இவற்றுடன் ஒரு கார்ட்டூனிஸ்ட்டுக்குரிய சர்வதேசப் பார்வை கொண்ட கார்ட்டூன்களும் வரையப்பட்டுள்ளன.

தயா ஒரு கார்ட்டூனிஸ்டாகவே பரவலான கவனிப்புக்குள்ளாகியவர். ஆனால் கார்ட்டூனிலும் பார்க்க நவீன பாணி ஓவிய முனைப்பே அவரது படைப்புக்களில் மேலோங்கி நிற்கின்றது. ''தான் ஒரு கார்ட்டூனிஸ்ட்டாகவே வரவிரும்புவதாகவும் சிறு வயதில் இருந்தே கார்ட்டூன் தனது கவனிப்பிற்கும் மனதுக்குப் பிடித்தும் இருந்தது'' என்று சொல்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








''வாசிக்கப்படும் செய்திகளுக்கிடையில் பார்க்கப்படும் ஒரு செய்தியாக இருப்பது-அதாவது ஒரு ஓவியமாக இருப்பது என்பது - காட்டூன் விசேட கவனிப்பைப் பெறக் காரணமாக அமைகிறது.''

காலமும கோலமும் தொகுப்பில்
ம. நிலாந்தன்

இரண்டு வருடகாலத்தில் ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த கார்ட்டூன்கள் சிலவற்றின் தொகுப்பாகவே ''காலமும் கோலமும்'' வெளி வந்திருக்கிறது. எங்களின் காட்டூன் உலகில் வெளிவந்திருக்கும் குறிப்பிடக் கூடிய தொகுப்பு இது.

இவற்றைவிட தமிழீழம், அறிவொளி, தெருப்பு, தளிர், ஆதாரம் போன்ற சஞ்சிகைகளிலும் தயாவின் கார்ட்டூன்கள் பிரசுரமாகியுள்ளன.

உள்ளம், சிரித்திரன், சுதந்திரப்பறவைகள், விடுதலைப் புலிகள், வெளிச்சம் ஆகிய பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும் இவரது ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. 30க்கு மேற்பட்ட ஓவியங்களை (வர்ண)த் தீட்டியுள்ளார். கண்காட்சிகளில் அவை கவனத்தைப் பெற்றவை. போராட்டச் சித்தரிப்புக்களில் தயாவின் ஓவியங்கள் பரிசு பெற்றுள்ளன.

சுவரொட்டிகள், முகப்பு அட்டைகள், விளக்கப்படங்கள், கார்ட்டூன்கள், சித்திர எழுத்துக்கள் எனத் தூரிகையினால் தன்னுணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் இளைஞர் தயா ஆகும்.

ஈழத்து ஓவியக் கலையின் வளர்ச்சி காலஓட்டத்திற்கேற்ப நவீனத் தன்மையுடன் ஏற்படவேண்டும். அலைக்கழிக்கப்பட்டிருக்கும் தமிழினத்தின் வாழ்க்கையை இருப்புக்கொள்ளச்செய்ய நிகழும் இந்தப் போராட்டத்திற்கு உழைக்க வேண்டும். இந்த நிகழ்வுகளை ஆவணப்படுத்த ஓவியம் ஊடகமாக்கப்படவேண்டும் என்ற முனைப்புடன் தயா தொழிற்படுவதை அவதானிக்கலாம்.

தி. தயானந்தம் என்ற இயற்பெயரைக் கொண்ட தயா யாழ். மத்திய கல்லூரியில் படிப்பை முடித்துவிட்டு இப்பொழுது யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.

தனது ஓவியத்துறையின் ஊக்குவிப்புக்கள் 'சுயதேடலும், ஓவியம் பற்றிய பரிச்சயமுடையவர்களுடனான அனுபவப் பகிர்வுகளுமே' என்கிறார் தயா.

தயாவின் ஓவியங்கள் வெளிச்சம் 1, 2, 3 ஆம் இதழ்களில் இடம் பெற்றுள்ளன. இந்த இதழையும் அவரது ஓவியம் அலங்கரிக்கின்றது.

தேடல் முயற்சியும் கெட்டிறியும் பக்குவமும் படைப்புத்திறனும் மிகுந்த தயாவையும் அவரது படைப்புக்களையும் கௌரவிப்போம் ஊக்குவிப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தாய்நிலம்

o
o
o

**கருணாகரன்**

நேற்று
நாற்பது தடவைகள் வந்து போயின விமானங்கள்
வெடிமருந்தையும் இராணுவத்தையும்
அவர்களின் கொலைக் கருவியையும்,
அவை சுமந்து வந்தன.

ஒரு போருக்கான ஆயத்தத்தில்
இப்போது இராணுவம்;
எம்மைக் கொல்லும் இராணுவம்

நேற்றுப் போல இன்றும்
யுத்த முனையில்
இரண்டு 'ஹெலி'களின் குறிதேடல்
நம் எல்லோருக்குமே வெறுப்பைத் தருகின்ற
என் குழந்தை,
''கோன் மூட்டி'' எனக் கோபம் கொள்கிற
'சீப்பிளேன்'..... எல்லாமே
வானில், முகில்கள் சிதைய
சன்னங் கொண்டலைகின்றன.

எங்களின் வானத்தில்
பறவைகள் திசைகெட்டுப் பறக்கின்றன
சூரியன் சாம்பலாகின்றதே!

ஊரில்,
என்றும் நிமிர்ந்தே நிற்கின்ற பனைகளும் அதிர
நம் தலையின் மேலே,
புலன்கள் விறைப்பெடுக்கப் போகின்றன
போர் விமானங்கள்.

எங்கோ வெடிக்கும்
குண்டின் அதிர்வில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முற்றத்துப் பூக்கள் உதிர்கின்றன
விழிகள் பிதுங்கக் குழந்தைகள் விழிக்கின்றனர்.

o o o

விடுதலைக் கருவியுடன், போரின் முகங்கொள்ள,
போராளிகள் தயார்.
விடுதலை இச்சை ஓங்கி ஒலிக்கும்
உள்மனதின் கூவலில்
பொன்னொளி பரப்பும்
சுதந்திரப் போருக்கு
போராளிகள் தயார்.

நீங்களெல்லாம் வீதிகளில் திரிவீர்;
வெறும் வாய் பேசி
நீலம், பச்சை, சிவப்பு, வெள்ளை
என்ற வண்ணமாய்
நிறம் பார்த்தலைவீர்.

இந் நேரம் யுத்தம் மூண்டிருக்கலாம்
அல்லது எப்போதும் நிகழலாம்
பூவும் பிஞ்சுமாய்ப் பூத்திருக்கும்
முற்றத்து முருங்கை முறியும்
முழு நிலவுடைந்து சிதறும்
வெள்ளாப்போடு. விறைப் பெடுக்கும் குளிரில்
நீர் விட்டு வளர்த்த பயிர்
எரிந்த மணம் எங்கும் பரவும்.

அப்பு; பத்திரமாய் அடைத்த வேலி,
உள்ளம் உவந்துருகித் தங்கை
வளர்த்த வெள்ளைப் பேடு,
வெள்ளாட்டுக்குட்டி இரண்டும்
குண்டொன்றின் குழியிலடங்கலாம்
ஒருமம். அந்நாட்களைத் தின்னும்.
வீடு திறந்திருக்கும்; கூரையின்றி
இவையல்ல நம வாழ்வு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீங்களெல்லாம் வீதிகளில் திரிவீர்
வார்த்தையின்றி; துயர் சுமந்து
பேசாது மௌனித்து
இடம் விட்டகன்று...

o o o

போரின் பிறகு,
வீசிய குண்டில் வீழ்ந்த முருங்கையைப் போல்
வேறெதுவும் புதிதாய்த் தளிர்க்கலாம்
உடைந்த வீட்டின் முகட்டை விடவும்
அழகாய் ஒரு குடில் இனியும் நிமிரலாம்
பனிபடிந்த காலையைப் போலப்
பிறகும் இனிதாய்
பழகிய நாட்கள் எழுந்து வரலாம்.

பொன் பரவிய மாலையில் புழுதியும் அழகாய்
கண்களில் தெரியும் கைகளும் அளையும்
தோட்ட வெளியில் துளிர்க்கும் பயிர்கள்
நம்பிக்கை தரும் நாற்றென வேரோடும்
முறிந்த பனையின் அடியில் இளைய
முளைகள் எழுந்து முசவும் கூடும்.
வீசும் காற்றில் வீசையுடன் ஏறும்
அலைகளின் எழும்பலில் எங்களின் பட்டுகள்.

யாதும் நிகழும் என்பதாகுக;
நாம் விரும்பாத போரின்பிறகு
யாவையும் புதிதாய் எழுவதாகுக.

ஆயினும்,
நிலம் வேண்டுமே; நிலம்
எனக்கு, உனக்கு; அவனுக்கு
நம் எல்லோருக்குமான நிலம்
தாய் நிலம்
□□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மைக்கல் எழுதிய சிறுகதை

மைக்கல் எழுதிய சிறுகதை

மைக்கல் எழுதிய சிறுகதை

## தேடல்

தேடல்

தேடல்

சல்... சல் எனும் மாட்டு வண்டியின் ஓட்டத்துடன், காப்ரம் கச் சைக்கிள்களை ஓட்டியவாறு சைக்கிள் வியாபாரிகள், பழுதடைந்த அப்பாதையினூடே தங்கள் பயணத்தைத் தொடர்கின்றனர். அங்கங்கே சிறிய சிறிய கள்ளி, நாகதாளி, நாயுருவிப் பற்றைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக, அப்பாதை வட்டக்கண்டல் கிராமத்தை நோக்கி வளைந்து வளைந்து சென்றது. சைக்கிள்களின் இடை நடுவே மீன் வியாபாரிகளின் மோட்டார்சைக்கிள்களும், பொருளாதாரத் தடை எனும் புகையைக் கக்கியவாறு புழுதி படிந்த அப்பாதையின் பள்ள, மேட்டிடங்களில் ஏறி இறங்கி ஒருவாறு பிரதான வீதியை அடைந்தன.

"ஆ சனியன் பிடிச்ச கல். காலில அடிச்சுப்போட்டுது" என்றாள் வேணி. நகம் கிளம்பி இரத்தம் கசிந்தது.

முட்களின் கோரங்கள் அவள் பாதங்களைப் பதம் பார்த்தன. வெயில் கொடுமை. பசியுடன் களைப்பும் சேர்ந்து அவளை வாட்டியது. அடிபட்ட தனது காலைத் தேய்த்து விட்டுத் தன் நடையைத் தொடர்கிறாள்.

"ஐயோ... இந்தவாவிலை... சீச்சி" எதையோ பலமாக உற்றுப்பார்க்கின்றாள். மீண்டும் ஏமாற்றத்தின் கோடுகள் ஆழப்பதிந்தன; நடக்கின்றாள். இன்னும் கொஞ்சத் தூரத்தில் வட்டக்கண்டல்.

"ஆரது...சைக்கிளை... வாறது" வெய்யிற் கொடுமையால் வருவதைக் கண்ணால் உற்று நோக்க முடியவில்லை. தன் சேலைத்தலைப்பால் தலையை மூடிக் கொண்டாள். காற்றில் மிதந்து வந்த தூசு துகள்களுக்குள்ளும்; புழுதி படர்ந்த அப்பிரதேசத்தை உற்று நோக்கினாள்.

## மைக்கல் எழுதிய சிறுகதை

மறுபடியும் அவளை ஏமாற்றம் கௌவிக்கொண்டது. பக்கத்தில் தெரிந்த வயல் வெளியை நோக்கினாள். வரம்பில் நின்று இரைதேடிக் கொண்டிருந்த ஆட்காட்டிக் குருவி ஒன்று; வானத்தில் பறந்து வட்டமிட்டதால் மேலே வானை நோக்கி பெரும் ஏமாற்றத்துடன் ஓசை இட்டவாறு கிளம்பியது.

அவளுக்கு பசியும் தாகமும் வாட்டியது. அவளின் பழைய பசலையைக் கொழுவி இழுத்த முட்செடியிலிருந்து தன் சேலையை விடுவித்துக் கொண்டு தொடர்ந்தாள்.

''வீட்டில குமருகள்... என்னபாடோ எதுபாடோ''

தனக்குள்ளே கூறிக் கொண்டு தளர்வுடன் நடந்தாள் வழியில் வந்த பையன்களிடம்;

''தம்பி வட்டக்கண்டல் புலிப் பொடியளின்ர 'காம்' இருக்குதாம். எங்கை என்டு சொல்லுங்கோவன்'' என்றாள் மிகவும் வேண்டுதலாக.

''அதக்கா... எங்களுக்கும் சரியாத் தெரியாது... அந்தப் பழைய சங்கக் கடைக்குக் கிட்டத்தான் என்டு கேள்விப்பட்டனான். போய் விசாரிச்சுப் பாருங்கோவன்'' என்றான் ஒருவன்.

''சரியப்பன் வாறன் போயிட்டு''

அதிலிருந்து ஒரு கால் மைலில் அந்தச் சங்கக்கடை. சிறிலங்கா இனவாத அரசின் புனர்வாழ்வுச் சான்றிதழ்கள் எனும் கருத்ததைச் சித்தரிக்கும், குண்டு போட்டழித்த பல வீடுகள் கண்ணிற்பட்டன. பக்கத்தில் தன் முதுகுப்புற ஓட்டைகளுக்கு ஒட்டுப் போட்ட ஒரு பழைய சைவக் கோயில். அதனருகே இருந்த காம்பை ஒருவாறு விசாரித்துச் சென்றடைந்தாள்.

''தம்பி . இந்தக்...... ''காம்'' பொறுப்பாளர் நிற்கிறாரோ?

''ஓர் அம்மா நமையன் அண்ணனே ..... அவர் ... கிளிநொச்சிக்குப் போனவர். இனி எப்ப வாறாரோ தெரியாது'' என்றான் அவன்.

''சே .. அவ... குட்டக் கேட்டால் தெரியும் என்டு வந்தன்...... இப்ப அவருமில்லை''

''அம்மா...சாப்பிட்டீங்களாம்மா''

''வேண்டாமப்பு சாப்பாடு...... நான் வாறன் போட்டு''

''பாவம் இந்த அம்மா, களைச்சு வந்திருக்குது'' தனக்குள்ளே சொல்லிக் கொள்கின்றான் அவன்.

றோட்டின் கரைக்குச் சென்றாள். பஸ் ஒன்று குறுக்காகச் சென்றுகொண்டிருந்தது. அவள் போன வழியில் இருந்து மெயின் றோட்டுக்குச் சென்றடையும் பாதையில் இரண்டு நாய்கள் கடிபட்டுக் கொண்டு நின்றன. இவற்றையும் தாண்டி மெயின் றோட்டில் ஏறித் தனது பயணத்தைத் தொடர்ந்தாள்.

''என்ன... செய்யிறது இங்க வந்தாலும் இந்த நிலை. இவ்வளவு நாளும் அலைஞ்சும் ஒரு முடிவும் கிடைக்குதில்லை. இனி ஆரட்டப் போறது? இனி முருங்கனுக்குத்தான் போக வேணும்''

தன் மனதுக்குள் அவள் முடிவு எடுத்துக் கொண்டு தளர்ந்த நடையுடன் தன் இருப்பிடத்தை நோக்கி போகின்றாள்.

(2)

''அம்மா..இண்டைக்கு முருங்கனுக்கா போறீங்கள்'' என்றாள் சுகந்தி.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தேடல்

"ஓம்புள்ளை. போன தடவை வட்டக்கண்டல் போயும் சரி வரேல்லை. அங்க அந்தப் பொறுப்பாளர் கிளிநொச்சிக்குப் போட்டாராம். அது...... தான் முருங்கனுக்குப்போய் கேட்டுப் பாப்பம் எண்டு யோசிச்சனான்."

"சரியமோ. எப்பிடியாவது விசாரிச்சுக் கொண்டு வந்திடுங்க" என்றாள் மிகவும் ஆவலுடன் சுகந்தி. அவன் பஸ் வண்டியில் ஏறிச் சின்னப் பண்ணையை அடைந்தான். அதிலிருந்து அரிப்புக்குப் போகிற மெயின் றோட்டினூடாக முருங்கனை நோக்கி விரைந்தான். இடையே நாலுமைல் வரை ஒரே வயல்வெளி, அங்கே.. அந்த வயல் வெளிகளில் வேலைக்காரர்கள் கதிர்களைக் கட்டுக் கட்டாகக் கட்டி குமிவைத்தார்கள்.

வெய்யில் உச்சிக்கு வந்து கொண்டிருந்தது. தலையிடி அவனை வாட்டியது. றோட்டினருகே சிறு வடலிக்கூடல், அதனருகே களைப்பாறுவதற்காகப் போய் அமர்ந்து கொண்டான். வடலியில், தங்கி நின்ற காட்டுப் புறா வொன்று விரிட்டபடி மேலெழுந்தது.

"பஸ் இன்னும் இரண்டு மைல் போக வேணும்" அலுத்துக் கொட்டினாள். பள்ளந் திட்டி நிறைந்த கற்பாங்கான றோட்டினூடே நடந்து வந்ததனால் அவன் நெற்றியில் இருந்து வழிந்தோடிய முத்து முத்தான வியர்வையில் தெரிந்தது. மீண்டும் ஒருகணம் அந்த வயல் வெளியை நோக்கினான்.

□ □ □

அதிகாலைப் பொழுதின் விடியலுக்காகக் கதிரவன் தன் பொன் கதிர்களை வீசியபடியே மேலை வானை நோக்கிக் கிளம்பிக் கொண்டிருந்தான். இச் சூரிய உதயத்தின் தழுவலில் செங்கதிர்கள் நெல்மணிகளைத் தொங்கவிட்டபடி விரிந்து பரந்து காணப்பட்டன. குளத்தில் இருந்து வாய்க்கால் வழியாகப் பாய்ந்தோடிய நீர் சன்னார் கிராமத்தினூடே பள்ளமடுக் குளத்தை வந்து சேர்ந்தது. வாய்க்கால் அருகே இருந்த பிரதான பாதை மிகவும் பழுதடைந்த பாதையாகக் காணப்பட்டது. வழியில் அங்கொன்றும் இங்கொன்றுமான சன நடமாட்டம், ஓங்கியுயர்ந்த பாலைக்காட்டின் ஊடே வளைந்து சென்ற அப்பாதை ஒரு நதியின் ஓட்டம் போல அக் கிராமத்தின் எழிலுக்கு வனப்பூட்டியது.

அது அறுவடை காலம். வசந்தம் பூத்துச் சிந்தியிருந்தது. வயற்கரையின் அருகே அமைந்திருந்த சிறு காவற் குடிசை அதிலிருந்து கொஞ்சத் தூரத்தில் அவர்களது வீடு. அதுவே அவர்களின் உலகம். ஊரில் வயல்களில் பொலிக்கொடிகள் உயர்ந்தன தான் ஆனால் சுந்தரத்தின் வீடு...

வழிநெடுகக் கிடந்த சிறு சிறு கூளாங் கற்களை ஏதோ சிந்தனையில் தடியால் தட்டித் தட்டிக் கொண்டு வாய்க்கால் மேட்டைச் சென்றடைந்தான் சுந்தரம். அதிலிருந்து தனது பெருவிழிகளை அகல விரித்தான். தங்கள் கமத்துக் கொட்டில் கண்ணில் பட்டது. பழைய சாரத்தை மடித்து இடுப்பில் கட்டிக் கொண்டான். வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்த அலையினூடே வெகு சிரமப்பட்டு கரையைத் தாண்டி விட்டிருந்த அந்த வெட்டுக்குத் தேவையான அரிவாள், தண்ணிக் குடம் எடுத்து வைத்தான். குடிசைக்குள் அவன் மனைவி கௌரி வயதுக்கு வந்து விட்ட மூன்று குமருகள், அவர்களது புகழ்ச்சிக்குரிய மகன் சூரி. விடியப்புறத் தோட வேலையைத் தொடங்கினால் நேரத்துக்கு முடிச்சிடலாம்' என்று சொன்னபடி தேனீரைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மைக்கல் எழுதிய சிறுகதை

கொடுத்தாள் மனைவி. இவனுடன் அறுவடை வேலைக்காக வருவதாகக் கூறியவர்களெல்லாம் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் அரிவாளுடனும் கட்டுக்கயிறுகளுடனும் வயலுக்குள் இறங்கினார்கள். அறுவடை வேலையில் சூரியும் பங்கு கொண்டான். கதிர்களை கட்டுக்கட்டாக ஓர் இடத்தில் குவித்தார்கள்.

"இ முறை சுந்தரத்தின்பாடு பழையில்லை" என்றார் அரியத்தார்.

மௌனமாகச் சிரித்தபடி கதிர்களைப் கைப்பிடிக்குள் எடுத்துக் கொண்டிருந்தான் சுந்தரம். அவனது சிந்தனை எல்லாம் எப்படி பெண்டாலும் இந்த மூன்று குமருகளையும் நல்ல இடத்தில் கரை சேர்க்க வேண்டும் என்பதே. சற்றுத் தொலைவில் அவன் மனைவி கௌரி மகளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு நின்றாள். தன் மகன் சூரி நன்றாக வேலை செய்வதையிட்டுப் பெருமிதம் கொண்டாள்.

"ம.. இவனை நம்பித்தான் இந்த மூன்று குமருகளும்" தனக்குள்ளே சொல்லி ஆறுதல் அடைகின்றாள். பாசத்தின் ஊட்டம் அவளை ஒரு கணம் வாட்டியது.

தன் கணவரைச் சிறிது நேரம் பார்த்து விட்டு மகள் வசந்தியிடம் "மோளை ஏலாட்டி கொஞ்ச நேரம் இருபுள்ளை" வார்த்தையில் இரக்கம் ஊறியிருந்தது.

"வேண்டாமம்மா. தம்பிதான் பாவம். வெய்யில்ல கனநேரமா வேலை செய்யுறான்.. அவனைக் கூப்பிடுங்கோ"

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைச் சூரி கேட்டுக் கொண்டிருந்தான். குடும்பக் கஸ்ரத்தை; தாங்கள் ஊரில் எந்த நிலையில் இருக்கின்றோம் என்பதைச் சிந்திக்கும் அளவுக்கு அவனுக்கு அறிவு இருந்தது.

"சூரி.. சூரி.. அப்பன் சூரி.." தாய் கூப்பிடும் சத்தம் அவன் காதில விழுந்தது. ஆனால் அவன் அந்த இடத்தை விட்டு ஒரு அடி கூட நகரவில்லை.

மதியம் சாப்பாட்டிற்காக எல்லோரும் கை கால்களைப் பாய்ந்தோடும் அருவியில் கழுவிக் கொண்டனர். சுந்தரமும் தன்னைக் கழுவிக் கொண்டு தலைப்பாகையை அவிழ்த்து உதறி விட்டுத் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். எல்லோரும் சாப்பாட்டில் முழுக்கவனத்தையும் செலுத்தினர். சாப்பிட்டு முடிந்தபின் இடுப்பில செருகி இருந்த அரைகுறைச் சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான் சுந்தரம்.

"அம்மா......... எனக்கின்டைக்கு.....ஒரு மா....திரி இருக்குதம்மா" என்றாள் சுகந்தி.

"விட்ட போய்ப்படு புள்ளை வெய்யிலுக்க நிற்காத"

"எட சுந்தரம்! இன்டைக்கு காலம பேப்பர் பார்த்தனியோ" என்றார் மாணிக்கத்தார்.

"இல்லை அண்ணை.... என்ன விசயம்"

"வெப்பங்குளத்தில கறுப்புச் சட்டைக்காரர் ஆக்களையெல்லாம் வெட்டிப் போட்டிருக்கான்களாம்"

"மெய்ப் தானோ அண்ணை"

"ஓமடாப்பு"

"இந்த நாசமறுப்பான்களால பெரிய தொல்லையாப் போச்சு." என்றான் சுந்தரம்

"சில வேளையில இஞ்சையும் வருவான்களாம்" என்றார் மாணிக்கத்தார்.

"அவங்க வந்தா எங்கை அண்ணை ஓடுறது"

"எங்க ஓடுறது" என்றார் பதிலாக மாணிக்கத்தார்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



R226

# தேடல்

''அம்மா நானொருக்கா கடைக்குப் போய்ட்டு வரட்டே'' சூரிகேட்டான்

''கெதியா வாப்பு'. என்றார் தாய் கௌரி''

□ □ □

பனை வடலியில் இருந்து வந்த குளவி ஒன்று பறந்து வந்து அவள்காதருகே பேரிரைச்சலுடன் ரீங்காரமிட்டவாறு மறைந்தது. 'திக்' என்றவறாகத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள் பழைய ஞாபகங்கள் சிலகணங்கள் அவளைக்கிறுங்கவைத்தன. வயலைப் வெறித்துப்பார்த்தவாறே பெரு மூச்செறிந்தாள். வெயிலில் வயலில் அனல் பறந்தது. புற்களும் கருகிப் போய் விட்டன.

''இன்னும் இரண்டு மைல் போக வேணும்'' தனது பயணத்தைத் தொடர்கின்றாள். வண்டிற் சில்லின் நெரிப்பால் உடைந்து கிடந்த சிறுகுறுணிக்கற்கள் செருப்பில்லாத அவளது பாதங்களைத் தின்றன. ஒருவாறு முருங்கனை அடைந்தாள். அங்கு சந்தியில் இருந்து இருபது யார் தூரத்தில் உள்ள பள்ளிக்கூடத்திற் கருகாமையில் இருந்த காம்பை சென்றடைந்தாள்.

''தம்பி, சூரி எங்கிற பெடியன் வந்தவனாப் பன்?'' என்றாள் கௌரி வேண்டுதலாக.

''இல்லையம்மா அப்பிடி ஒருத்தரும் இல்லையேம்மா நீங்க எங்கை இருந்து வர்றீங்க''?

''பெரியமடுவிலை இருந்தப்பா ஆறேழு மாசமாச்சுது இன்னமும் ...... என்ர பிள்ளையைக்காணக் கிடைக்கேல்ல''

''பண்டிவிரிச்சானிலை போய்க் கேட்டுப் பாருங்கோ; சில வேளையில் நிற்கலாம்'' என்றான் அந்தப் போராளி.

''சரிஅப்பு ...நான்..... போட்டுவாறன்.''

மறுபடியும் பயணம் தான். சும்மாவா விடும் இந்த முட்புதர்ப்பாதைகள்

(3)

''என்ன புள்ளை திடீர் எண்டாப் போலை; இந்த பிரச்சனையான நேரத்துக்குள்ள .........'' என்றார் மாணிக்கத்தார்.

''இவனைத்தான் தேடிப் போறன் மூன்டு மாசத்துக்கு முதல்ல முருங்கனுக்குப் போனவன் அங்கையும் இல்லை. சில வேளை பில பண்டி விரிச்சானிலை நிற்பானெண்டுதான் வந்தனான்''

''வா புள்ளை நான் கூட்டிட்டுப் போய்விடுறன்'' என்றார் மாணிக்கத்தார் பரிதாபத்துடன்.

''வேண்டாமண்ணை இன்னும் கொஞ்சத் தூரம் தானே; போயிடலாம்.'' என்றாள் அருகருகே நிறைந்த மரங்களினூடு இருந்த மான் ஒன்று பக்கத்துப் பற்றைக்குள் ஓடி மறைந்தது.

''சரிபுள்ளை நான் வரட்டே.''

''ஓம் அண்ணை'' என்றாள் மிகவும் களைப்புடன்.

அவள் தன் பயணத்தை தொடர்ந்தாள் பாலம்பிட்டி யாவனைப் பிரிந்து ஓசையோடு அடர் காட்டுப் பாதையால் மடுக் கோயிலை சென்றடைகிறாள்.

......மீண்டும் கணவன் மறைந்த நாள் நினைவுக்கு வந்தது. கறுப்பு சட்டைக் காரர்கள் வேட்டையை முடித்துவிட்டு தங்கள் தளத் திருத் திரும்பி இருந்தார்கள். வழியில், வாய்க்காலில் எங்கு பார்த்தாலும் வெட்டுண்ட உடலங்கள், ஒரு கணம் பதைத்த மனம் உடலங்கள் மீது நிலைத்தது பெரிய ஆலமரத்தடியில் இருந்த கூகைக்கோட்டான் ஒன்று கீச்சிட்டபடி மேல் எழுந்தது. பாலம்பிட்டிப் பக்கம் இருந்து பெரிதாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேடல்

ஏமாற்றம் அங்கிருந்து ஆத்திமோட்டைக்கு கடைசப் பெயரை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு புறப்பட்டுகிறாள். வழியில் பாறிப் போய்க் கிடந்த பாலை மரத்திலிருந்து புறாக்கள் சிறகுகளை சடசடத்தவாறு கிளம்பின.

(4)

''ஆரது, மாணிக்கம் அண்ணையா...... வாங்க இருங்க'' என்றாள் மூன்றாவது மகள் பவளம்.

''எப்பிடிப்பிள்ளை சுகமே'' மாணிக்கத்தார் கேட்டார்.

''மரவள்ளி வச்சனாங்கள். எப்படியோ சீவியம் போகுதண்ணை''. என்றாள் கௌரி.

''பிள்ளை கௌரி ... . நேற்று நம்மட சூரி மாதிரித் தெரிஞ்சுது. பெடியளோட வானில ஆத்திமோட்டைப் பக்கம் போனவங்கள். நீ..... ஒருக்காய் பார்த்திட்டு வாவன் பிள்ளை''

சுகந்தி, வசந்தி, பவளம், தாய் கௌரி எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். விழிகளில் ஆவல் வழிந்தது. நம்பிக்கையின் சுடர்களாக அவை ஒளிர்ந்தன.

''அப்ப அண்ணை இப்ப போனா கண்டிடலாம் என்ன?

''போன மாதத்துக்கு முதல் மாதந்தான் அம்மா பண்டிவிரிச்சானுக்குப் போனவ அண்ணை அங்கை இல்லை என்டு பேட்டாங்கள் திரும்பி அம்மா வந்திருக்கிறா'' என்றாள் சுகந்தி.

''அப்ப பிள்ளை நான் போட்டுவாறன்'' மாணிக்கத்தார் நடந்தார்.

ஓம் .. அண்ணை .. ஓம்'' என்றாள் கௌரி.

அதிகாலை சூரிய உதயத்தின் முன் வெள்ளாப்போடு ஆத்திமோட்டைக்கு நடந்தாள். பனி படர்ந்த வீதியில் காட்டுக் கோழிகளின் சுவடுகளின் மேல் இவளின் கவல்கள் புதிதாக அடையாளப்படுத்தின அந்தப் பாதையில். சன்னார் ஒற்றையடிப் பாதையினூடு புகுந்து படிந்த அந்தப் பற்றைகளின் ஊடே வளைந்து சென்றது. அந்த ஒற்றையடிப் பாதை சன்னார் அணையையும் தாண்டி ஒரு வெட்டையில் மிதந்தது. வெட்டையில் இருந்த வெண்கொக்குகள் யாவும் உயரப் பறந்தன. வெட்டையில் இருந்த கறையான் புற்றுக்கள் இடிந்து முட்டுக் கிடந்தன. பன்றி இடித்திருக்கவேணும் வெம்பில் காலம் என்றபடியால் நிலம் பாளம் பாளமாக பிளந்திருந்தது ஒருவாறு ஆத்திமோட்டைக்கு அருகே சென்று விட்டாள். வெய்யில் உச்சிக்கு மேல் ஏறிவிட்டது நடந்த களைப்பு, ஒரு வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்து விட்டு சூரி இருந்த அந்தக் 'காம்'பை நோக்கி விரைந்தாள்.

அப்போது தன் தாய் தன்னைத்தேடி வருவதை சாளரத்தினூடே அவதானித்த சூரி-

''டேய்...... அம்மா வாறாடா ... நான் இல்லை என்டு சொல்லடா...... எனக்கு அவசரமான வேலை இருக்குது. அது முடியவிட்டுத்தான் சந்திப்பன் என்டு சொல்லு கெதியாப் போடா'' ... .. விரட்டுகிறான்; பக்கத்தில் நின்ற போராளியை இவனுக்கும் பாசம் உண்டுதான் இல்லாவிடில் பாசறை வரைக்கும் வந்திருக்க மாட்டான்.

அன்று பெரிய மடுவில் அந்த நடுச்சாமத்தில் எத்தனை பேர் வெட்டுண்டார்கள். எத்தனை பேர் இரையானார்கள். நேரில் பார்த்தவனுக்குத்தானே அந்தக் கொடுமையின் விஸ்வரூபம் தெரியும். அதில் தன் தந்தையை வெட்டும் போது கூட முன்னால் இருந்து தப்பியோடி வந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தேடல்

ஏமாற்றம் அங்கிருந்து ஆத்திமோட்டைக்கு கடைசிப் பெயரை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு புறப்பட்டுகிறாள். வழியில் பாறிப் போய்க் கிடந்த பாலை மரத்திலிருந்து புறாக்கள் சிறகுகளை சடசடத்தவாறு கிளம்பின.

(4)

"ஆதார், மாணிக்கம் அண்ணையா...... வாங்க இருங்க" என்றாள் மூன்றாவது மகள் பவளம்.

"எப்பிடி பிள்ளை சுகமே" மாணிக்கத்தார் கேட்டார்.

"மரவள்ளி வச்சனாங்கள். எப்படியோ சீவியம் போகுதண்ணை". என்றாள் கௌரி.

"பிள்ளை கௌரி ..... நேற்று நம்மட சூரி மாதிரித் தெரிஞ்சுது. பெடியளோட வானில ஆத்திமோட்டைப் பக்கம் போனவங்கள். நீ..... ஒருக்காய் பார்த்திட்டு வாவன் பிள்ளை"

சுகந்தி, வசந்தி, பவளம், தாய் கௌரி எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். விழிகளில் ஆவல் வழிந்தது. நம்பிக்கையின் சுடர்களாக அவை ஒளிர்ந்தன.

"அப்ப அண்ணை இப்ப போனா கண்டிடலாம் என்ன?

"போன மாதத்துக்கு முதல் மாதம்தான் அம்மா பண்டிவிரிச்சானுக்குப் போனவ அண்ணை. அங்கை இல்லை எண்டு போட்டாங்கள் திரும்பி அம்மா வந்திருக்கிறா" என்றாள் சுகந்தி.

"அப்ப பிள்ளை நான் போட்டுவாறன்" மாணிக்கத்தார் நடந்தார்.

"ஓம்.. அண்ணை.. ஓம்" என்றாள் கௌரி.

அதிகாலை சூரிய உதயத்தின் முன் வெள்ளாப் போடு ஆத்திமோட்டைக்கு நடந்தாள். பனி படர்ந்த வீதியில் காட்டுக் கோழிகளின் சுவடுகளின் மேல் இவளின் சுவடுகள் புதிதாக அடையாளப்படுத்தின அந்தப் பாதையில். சன்னார் ஒற்றையடிப் பாதையினூடு புழுதி படிந்த அந்தப் பற்றைகளின் ஊடே வளைந்து சென்றது. அந்த ஒற்றையடிப் பாதை சன்னார் அணையையும் தாண்டி ஒரு வெட்டையில் மிதந்தது. வெட்டையில் இருந்த வெண்கொக்குகள் யாவும் உயரப் பறந்தன. வெட்டையில் இருந்த கறையான் புற்றுக்கள் இடிந்து முட்டுப்பட்டுக் கிடந்தன. பன்றி இடித்திருக்கவேணும். வெம்பில் காலம் என்றபடியால் நிலம் பாளம் பாளமாக பிளந்திருந்தது. ஒருவாறு ஆத்திமோட்டைக்கு அருகே சென்று விட்டாள். வெய்யில் உச்சிக்கு மேல் ஏறிவிட்டது நடந்த களைப்பு, ஒரு வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு சூரி இருந்த அந்தக் 'காம்'பை நோக்கி விரைந்தாள்.

அப்போது தன் தாய் தன்னைத்தேடி வருவதை சாளரத்தினூடே அவதானித்த சூரி-

"டேய்..... அம்மா வாறாடா... நான் இல்லை எண்டு சொல்லடா...... எனக்கு அவசரமான வேலை இருக்குது. அது முடிய விட்டித்தான் சந்திப்பன் எண்டு சொல்லு கெதியாப் போடா" ..... விரட்டுகிறான்; பக்கத்தில் நின்ற போராளியை இவனுக்கும் பாசம் உண்டுதான் இல்லாவிடில் பாசறை வரைக்கும் வந்திருக்க மாட்டான்.

அன்று பெரிய சமரில் அந்த நடுச்சாமத்தில் எத்தனை பேர் வெட்டுண்டார்கள். எத்தனை பேர் தீக்கிரையானார்கள். நேரில் பார்த்தவனுக்குத்தானே அந்தக் கொடுமையின் விஸ்வரூபம் தெரியும். அதில் தன் தந்தையை வெட்டும் போது கூட முன்னால் இருந்து தப்பியோடி வந்த

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மைக்கல் எழுதிய சிறுகதை

வனுக்குத்தான் தெரியும்; அக்கிராமத்தில் நிகழ்ந்த அவலங்களை

இன்றும் எதிரிகளை அழிப்பதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் வரும். அந்நேரத்தில் என் ஆத்ம துடிப்புக்களைத் தீர்த்துக்கொள்வேன். என்ற இலட்சியத்துக்காகவே இவன் இவ்வாறு அந்தப் போராளியிடம் சொல்லியனுப்பினான். அந்தப் போராளி கௌரியிடம் கேட்டான்.

''அம்மா ...... ஆருட்டையம்மா வந்தனீங்க,'' ''என்ர மகன் சூரியிட்டத்தான் அப்பு''

''அம்மா அவர் இங்கதானம்மா இருக்கிறார். பிறகு வந்து சந்திப்பாராம் நான் சொல்லலையம்மா· உங்கடை மனதை இப்படிச் சொல்லச் சொன்னார்.''

''சரி தம்பி நான் வாறன் போயிறன்''

நெஞ்சு விம்மித் தணிந்தது.

-5-

அடம்பன் மண் செம்மண் ஆகிய தினம். இராட்சதர்கள் பலர் கொல்லப்பட்ட தினம். அடம்பன் மக்களின் அழுகைக்கு ஓய்வு கொடுத்த தினம்.

அப்போது தான் புலிகளின் மாபெரும் தாக்குதல் நடாத்தப்பட்டது. புரட்சி கோஷத்தோடு புனிதப் படைக்குப் புறப்பட்டவர்களுள் கௌரியின் மகன் சூரியும் ஒருவனாவான்.

மகன் அடம்பனில் நிற்பதைக் கேள்விப்பட்டு தாய் ஓடோடி வந்தாள். அங்கே ஆட்காட்டி வெளியில் சில மாவீரர்களது புகழுடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன அணியணியாய் திரண்டு வந்தவர்களுள் தன் தாயை அவன் மறந்துவிடவில்லை மாறாக தாயைச் சந்திக்கும் முன் தான் எதை நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்தானோ; அதை முடித்துக் கொண்டு சீருடையணிந்து எதிரிகளை எந்நேரத்திலும் எதிர்கொள்வேன் எனும் உறுதியுடன் ஆயுதம்தரித்து நின்றான் தனது மகன் இவ்வளவு சனத்திரளுக்குள் நிற்பதைத் தாய் கௌரி இன்னமும் காணவில்லை.

இறந்த மாவீரரது புகழுடல்களுக்கு அஞ்சலி செலுத்தி வந்த மக்களிடையே, இவளும் வரிசையாக நின்று அழுதவண்ணமே இருந்தாள். ஒவ்வொரு மாவீரரது புகழுடலையும் பார்த்து அழுதழுது கண்ணில் நீர்கூட இல்லாது தொண்டைக்குள் விக்கித்து அடங்கிக் கொண்டது. அப்போது.

''அம்மா... இதிலை உங்கட பிள்ளையுமே இடக்குது'' என்றார் மிகவும் பரிதாபத்துடன் ஒருவர்

''இல்லையப்பு எல்லாமே என் பிள்ளைகள் தான். ஆனால் நான் பெத்த பிள்ளையை மட்டும் இதற்குள் காணவில்லை'' என்று சொல்லி வாய் மூடுவதற்கு முன்னரே.

''அம்மா'' என்றவாறு கம்பீரமான தோற்றத்துடனே முன்நிற்கின்றான் சூரி. வயல் வேலையில் திறமையாகச் சொல்வதையிட்டுப் பெருமிதம் கொண்டவள் இப்ப அவன் நிற்கும் தோற்றத்தைக் கண்டு மனதில் பூரிப்படைந்தாள். □□

www.tamilarangam.net



# தொடர்பியலும் ஒலி ஒளிப்பதிவு நாடாவும்

சபா. ஜெயராசா

தொடர்பியலிற் புதிய பரிமாணங்களை வழங்குவதில் "வீடியோ" நாடா சிறப்பிடம் பெறுகின்றது.

"அம்பெக்ஸ்" "சொனி" ஆகிய நிறுவனங்கள் ஒலியைப் பதிவு செய்து மீட்டெடுக்கக் கூடிய மின்காந்த நாடாக்களைத் தயாரித்தன. இந்த நிகழ்ச்சி 1948 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. 1969 ஆம் ஆண்டில் சொனி (அரை அங்) அக்காய் (கால்அங்) ஆகிய நிறுவனங்கள் கறுப்பு வெள்ளை ஒளிப்பதிவு நாடாக்களைத் தயாரித்தன. பிலிப்ஸ் நிறுவனம் 1974ஆம் ஆண்டில் வண்ண ஒளிப்பதிவு நாடாக்களை அறிமுகம் செய்தது. ஆனால் 1978 ஆம் ஆண்டிலிருந்து மேற்கு நாடுகளில் வீடியோ வீட்டுப் பாவனைக்கு வரலாயிற்று.

மிக்க குறுகிய காலத்தில் உலகளாவிய ஒரு தொடர்பு ஊடகமாக வீடியோ வியாபித்து விட்டது. உலகில் வீடியோ செழிப்புப் பிரதேசங்கள் நான்கு இனங்காணப்பட்டுள்ளன. அவை, ஜப்பான், தென்கிழ் ஆசியா அரபுநாடுகள், ஐரோப்பா - வடஅமெரிக்கா என்பனவாகும். சுமார் 700 இலட்சம் பதிவு செய்யப்பட்ட வீடியோக்களும், 5000 இலட்சம் வெற்று வீடியோக்களும் விற்பனை செய்யப்பட்டு விட்டன (யூனெஸ்கோ 1988)

தமிழ் மக்களைப் பொறுத்தவரை வீடியோவின் ஒரு தலைப்பட்சமான உபயோகம் மேலோங்கியுள்ளது. சினிமாவை வீடுகளுக்குள் கொண்டு வந்த ஒரு சாதனம் என்ற பண்பு இங்கு விதந்து பாராட்டப்படுகின்றது. கிராமப் புறங்களிலே திறக்கப்பட்டுள்ள வீடியோ வாடகை நிலையங்கள் சினிமா விநியோக நிலையங்களாக இயங்குகின்றன. பொதுவாக வர்த்தகத்திரைப்படங்களுக்கே வீடியோ கொள்வோர் மத்தியில் கூடுதலான கேள்வி உண்டு. ஒருவகையில் இங்கிலாந்திலும் இதே வகையான அனுபவமே காணப்படுகின்றது. பரபரப்பான திரைப்படம் 30,000 அலகுகள் வீடியோ மூலம் விற்பனையாக கலைத்திரைப்படங்கள் 5000 அலகுகள் வரையில் விற்பனையாகின்றன.

குடும்ப நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்தல் என்ற வகையில் வீடியோவுக்கு ஒரு முதன்மையான இடம் உண்டு ஆயினும் எமது பாரம்பரிய சடங்கு முறைகளுக்கு இயைந்த

www.tamilarangam.net

வேப்ப மரநிழலில்
விளையாடித் திரிந்தவன்
மாமர நிழலில் மத்தள மடித்தவன்
கொய்யா மரத்தில
பழங்கள் தேடி
அணிலாய்ப் பாய்ந்தவன்
இன்று
தமிழ் ஈழத்தின்
எல்லையில் நின்று
கண் விழித்து
காவல் செய்யும்
காவலன்தான் இவன்.

அன்று
வேப்ப மரத்தின்
விதை பொறுக்கி எடுத்தவன்
இன்று
விடுதலைக்கு
விதை போட்டுக் கொண்டிருக்கின் -
- றான்.

கல் கொண்டு
கவண் வீசி புள்ளினங்கள்
தேடித் திரிந்தவன்
போர்க் கருவி கொண்டு
இன்று எதிரிகளைத்
தேடித் திரிகின்றான்.

## காவலன்

செல்வி சகுந்தலா அருணகிரிநாதன்

விளையாட்டுத் திடலில்
வேடம் தரித்தவன்
பரிசு பெற்றவன்
மக்களையும்
மகிழ் வித்தவன்
அந்த
மக்களின் மகிழ்ச்சி
நிலைப்பதற்காக
போர் வேடம் தாங்கி
நிற்கின்றான் இன்று.

அன்று
சிறுவனாக
வீட்டின் ஒழுங்கையில்
குதலை மொழிந்து
மழலைச் செல்வங்களுடன்
மழலையாக
வலம் வந்தவன்

இன்று
செந்தமிழ் சீமையின்
வீதியில்
'காவலன்' ஆக
வலம் வருகின்றான்
தமிழ்ஈழத்தின்,
தமிழினத்தின்
"காவலன்"

www.tamilarangam.net



சகல விதமான
நவீன
பாதணிகளுக்கும்,

யாழ் நகரில்

**பி (F) ராங் எம்போறியம்**
16, 38 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

www.tamilarangam.net



# தென் தமிழீழத்தில் பரவும் சிங்களம்

''தென் தமிழீழத்திலிருந்து வெளிவரும் சுதந்திரச்சுடர் கல்லச்சு இதழில் இருந்து தொகுக்கப்பட்டது.

தமிழர்களின் தாயகப் பிரதேசமான தற்போதைய அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் சொந்த நிலங்களில் வசதி வாய்ப்புகளுடன் திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றத்தை நடத்தி சிங்களவர்களுக்கான அம்பாறைத் தொகுதியை உருவாக்கியுள்ளது சிங்கள அரசு.

அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டதன் பின்பு முஸ்லீம் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர். இந்நிலை மெல்ல மெல்ல மாற்றமடைந்து தற்பொழுது சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டதை நாம் அறியாமல் இல்லை.

காலத்துக்குக் காலம் சிங்கள இனவாத அரசு இன வன்முறையைத் தூண்டியதனால் விவசாயத் தொழிலை மேற்கொண்ட தமிழர்களும், தொழிற்சாலைகளில் வேலைசெய்துவந்த தமிழர்களும் தமிழர் பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்டனர். இவ்விடங்கள் எல்லாம் சிங்களவர்களின் வதிவிடங்களாகவும், தொழிலிடங்களாகவும் மாறின.

முஸ்லீம் மக்கள் பெரும் பான்மையாக (தாங்கள்) வாழ்வதால் அம்பாறை மாவட்டம் தங்களுடைய மாவட்டம் என்று கருதிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சிங்கள அரசியல் தலைமைப் பீடங்களோ தங்கள் இன விரோதப் போக்கின் தன்மையில் கிழக்கு மாகாணத்தைச் சிங்கள மாகாணமாக மாற்ற வேண்டும் என்ற திட்டத்தின்படி அம்பாறை மாவட்டத்தின் எல்லை நிர்ணயங்களை மாற்றினார்கள்.

அருகிலுள்ள மாவட்டங்களான மட்டக்களப்பு மாவட்டம், மொனறாகலை மாவட்டம், பதுளை மாவட்டம், பொலநறுவை மாவட்டம் ஆகியவற்றின் பிரதேசங்களின் சில பகுதிகளை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்து சிங்கள சனத்தொகையை அதிகரிக்கலாயினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொகுதிமுறையில் தேர்தல்கள் மூலம் அம்பாறைத் தொகுதியில் ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய தொகுதிகளில் மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாதலால் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.

சிறிலங்காவில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல்முறை அறிமுகப்படுத்தப் பட்டதனால், அம்பாறை மாவட்டத்தில் இருந்து நான்கு சிங்கள இனப்பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும், ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையினால் சிறுபான்மை இனத்திற்குப் பாதகமான நிலையையே அம்பாறை மாவட்டத்தில் காண்கின்றோம். இப்பாறான நிலையை அம்பாறை முஸ்லிம் மக்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சிறுபான்மை இனத்தைப் பயன்படுத்தி, மற்றுமோர் சிறுபான்மையினத்தை நசுக்குகின்ற சிங்களப் பேரினவாதத்தின் தன்மையை சகல சிறுபான்மை இன மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் இயற்கைப் பெருக்கத்தைக் கொண்டு விரைவாகச் சிங்களப் பெரும்பான்மையை ஏற்படுத்த முடியாது என்ற எண்ணத்தில் துரித கதியில் சிங்கள மக்களை அரசு திட்டமிட்டுக் குடியேற்றி வருகின்றது

உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பாதிப்பிரதேசத்தை அபகரித்து சிங்களவர்களின், முஸ்லீம்களின் சொந்த நிலமாக மாற்றிய சிங்கள இனவாத அரசு 11-05-1970 க்குப் பிறகு மீண்டும் எமது தாயக மண்ணில் உருவான ஆக்கிரமிப்புக் கெதிரான போரினை நன்றாகப் பயன்படுத்தி தனது கடந்தகாலத் திட்டங்களை அமுல்நடத்தத் தொடங்கியது

தற்பொழுது பொத்துவில் பிரதேசத்தில் வாழ்ந்த 1305 தமிழ்க் குடும்பங்கள் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத காரணத்தை முன்னிட்டு இடம்பெயர்ந்து திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்கின்றனர்.

இச் சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசு பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. லகுகல பாணமை போன்ற இடங்களில், தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களில் அவர்களை விரட்டிவிட்டு சிங்களவர்களைக் குடியேற்றியுள்ளது. இதேபோல் பொத்துவில் 4ம் கட்டையிலும் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை நகரத்திற்கு மிகவும் அருகாமையில் அம்பாறை நகரம் அமைந்துள்ள [illegible] பிரதேசம் சிங்களவரால் அபகரிக்கப் பட்டதற்குப் பிறகு மல்வத்தை [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பழந்தமிழ்க் கிராமந்தான் எமது தற்காலிக எல்லையாக அமைந்திருந்தது. இப்பொழுது இதனை அண்டியுள்ள வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு போன்ற தமிழ்க் கிராமங்களிலும் சிங்களவர்கள் குடியேற்றப் பட்டுள்ளனர்.

உல்லை என்பது உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் தமிழர்களின் உல்லாசபுரி. இப்பொழுது இந்த உல்லாசபுரி சிங்கள மீனவர்கள் கிராமமாக மாறியுள்ளது. அரச உதவிகளினால் நவீன மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுள்ள இம்மக்கள் நீர்கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பாதுகாப்பு, மற்றும் வசதிகளை சிங்கள அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சாதாரண உபகரணங்களுடன் மீன்பிடித் தொழிலை மேற்கொண்ட முஸ்லீம் மீனவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவில் 2ம் குறிச்சியில் அவசியமற்ற முறையில் குடியிருந்த புத்தபிக்குகள் தமிழீழ மண்மீட்புப் போராட்டத்தைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறியிருந்தனர். இவர்கள் மீண்டும் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்ல 'கம்உதாவ' எழுச்சிக் கிராமங்களை சிறிலங்காவின் பல இடங்களில் நிறுவி சிங்களவர்களின் வாழ்வை வளம்படுத்தி வந்த இனவாத அரசு தமிழர்களைப் புறக்கணித்தே வந்தது.

தமிழர்கள் அந்நிய நாட்டுமக்கள் என்பதனை ஏற்று அதனை நியாயமென கருதினாலும்.

தற்போது தமிழ் நிலத்தில சிங்களவர்களை குடியேற்றுவதற்காக எழுச்சிக் கிராமம் அமைப்பதை நியாயமென அனுமதிக்க முடியுமா?

தற்பொழுது மீறாகலை என்னும் இடத்தில் 50க்கும் மேற்பட்ட புதிய வீடுகளைக் கட்டி, புதிய குளங்களை அமைத்து, புதியபாதைகளை ஏற்படுத்தி பாதுகாப்புக்காக இராணுவ முகாம்களை நிறுவி, ஊர்காவல் படை முகாம் அமைத்து சிங்களக் குடியேற்றத்தின் மறைப் பெயராக எழுச்சிக் கிராமம் ஒன்றை உருவாக்கும் இனவாத அரசின் போக்கை எந்த நீதியுள்ள சமுதாயமும் கண்டிக்காமல் இருக்கமுடியுமா?

தமிழ் மக்களுக்கு எந்தவித குறைகளுமில்லை. அவர்களைப் புறக்கணிக்கவில்லை. பாகுபாடாக அவர்கள் நடத்தப்படவில்லை. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளே என்று கூறும் சிறிலங்கா இனவாத அரசின் தமிழர் நிலங்களில் எழுச்சிக்கிராமமும், சிங்களக்குடியமர்த்தலும் தமிழர்களைப் புறக்கணிக்கவில்லையா என்பதை நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

நன்றி: சுதந்திரச்சுடர் 4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உங்களுக்குத் தேவையான,
சகல மருந்துப் பொருட்களுக்கும்

**இரட்ணம் பார்மஸி அன் குறோசரி**

388, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களின் சகல தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்

# கஸ்தூரி

பல்பொருள் அங்காடி

ஒருமுறை வாருங்கள் - உண்மை புரியும்

71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்